"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டு
—புழுதிவ
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரி
நில்லேன்; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளி நாடு மூன்றணா

மலர் 1 | சென்னை | 29—6—1954 | செவ்வாய் | இதழ்

கம்யூனிஸ்ட் கட்சி கரைவதேன்?

ஒரு முறை லெனின் சொன்னது இது: "பிரிட்டன் நாடு பிடித்துப் பிடித்து அழியும்; ஜெர்மனி படையைப் பெருக்கிப் பெருக்கி அழியும்; அமெரிக்கா, கடன் கொடுத்துக் கொடுத்து அழியும்!" "முதல் இரண்டும் ஏற்கனவே நடந்து விட்டது. மூன்றாவதான "அமெரிக்கா கடன் கொடுத்துக் கொடுத்து அழியும்" இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

* * *

உண்மையிலேயே லெனின் புத்திசாலி. "பூர்ஷுவாக்கள்" நினைப்பது போல, அவர் பைத்தியக் காரரல்ல. 'பொருள் முதல் வாத'த்தை, 'சர்வதேசக் கண்ணோட்ட'த்தோடு நடத்தி, 'உலகத் தொழிலாளரை ஒன்று படுத்த' 'பாட்டாளிகள் ராஜ்யத்'தை அமைப்பதற்குப் பாடுபட்ட லெனின், எல்லா நாடுகளும் எப்படி அழியும் என்பதைச் சொன்னார்; ஆனால் ரஷியாவைப் பற்றிச் சொல்லவில்லை. தாய் நாடு; அழியாது என்று நம்பியிருக்கலாம்.

* * *

ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது; புரிகிறது. ரஷ்யா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியால் அழியும்' ஆத்திரப்படாதீர்கள்; அவசரப்படாதீர்கள். ரஷ்யாவின் அழிவிலே நமக்கு நிச்சயமாக ஆசையில்லை. 'ஏகாதிபத்திய வெறியர்'களுக்கு கிலியூட்டி கொண்டிருக்கும் ரஷ்யா, நிரந்தரமாக வாழவேண்டும் என்பதே நமது ஆசை. ஆனால் அதனுடைய கர்ப்பத்தில் வளர்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதே, அது ரஷ்யாவின் அருமை பெருமைகளை அழித்தே விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. உயர்ந்த லட்சியங்கள்; அதிலே உருவான ஒரு நாடு; அதிலே தழைத்து வளர்ந்த கொள்கை; அக் கொள்கை உலகெங்கும் விட்ட கிளைகள்! அதிலே ஒரு கிளை, வேரையே சாய்த்து விடுமோ என்று நாம் அஞ்சுவதிலே அர்த்தமுண்டு.

முற்போக்குச் சக்திகளை அரவணைத்துக் கொண்டு வளர்வது, மற்ற நாட்டுக் கம்யூனிஸ்ட்களின் வழக்கம். அது வெற்றியும் பெற்றிருக்கிறது. ஆனால் இந்தியக் கம்யூனிஸ்ட் நண்பர்கள், தங்கள் பலத்தை மறந்து குதிக்கிறார்கள். "நாங்களே இந்தியா!" என்கிறார்கள்! "எங்கள் கொள்கையே உலக மகா கொள்கை!" என்று தமுக்கடிக்கிறார்கள். அதுவும், கீழே போய்க் கொண்டிருக்கும் நேரத்திலே குதிக்கிறார்கள்!

உண்மையைச் சொல்வதிலே தவறில்லை. கம்யூனிஸ்ட் கட்சிக்கு இது 'இறங்கு காலம்' பல இடங்களிலே கம்யூனிஸ்ட் செல்வாக்கு குறைந்து விட்டது. 'கிஸான்'கள் இடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள்: 'ஐக்கிய முன்னணி', கம்யூனிஸ்ட் கட்சியின் மறுபெயராகி விட்டது; வேறு கட்சிகள் அதில் இருக்க விரும்பவில்லை! இது நடக்கலாமா?

* * *

கொள்கையிலே குற்றமில்லை; ஆனால் அதை முழக்கும் நபர்களிடையே ஏதோ மாசு வளர்ந்துள்ளது! மறுக்க முடியாது, இதை! எந்தக் கட்சியும் இப்படித்தான். "கொள்கையால் வளரும்; நபர்களால் தளரும்" கம்யூனிஸ்ட் கட்சியில்—தென்னாட்டைப் பொறுத்த வரையில்—இருப்பவர்களில் பெரும்பாலாரை, மக்கள் வீணைகள் என்று நினைத்து சங்கீதம் கேட்கப் போனார்கள்; ஆனால் தாங்கள் கேட்ட சங்கீதம் வீணையிலிருந்து எழுந்ததுதான் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. 'தகர டப்பா'வில் கல்லைக் கொட்டிக் குலுக்கியது மாதிரித்தான் இருந்திருக்கிறது. குறைகிறார்கள் ஆதரவாளர்கள்; கரைகிறது கம்யூனிஸ்ட் கட்சி! முற்போக்காளர்கள், உண்மையில் வருந்தாமலிருக்க முடியாது. 'சீர்காழி'கள் தொடர்ந்து நடந்தால் என்ன ஆவது?

[2-ம் பக்கம் பார்க்க]

1-ம் பக்கத் தொடர்ச்சி]

தி. மு. கழகம் அதற்காகத் தான் கவலைப்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருக்கும் "சோமாறி"களுக்கு, உதவி வர வழைத்துக் கொடுப்பதை கம்யூனிஸ் கட்சி நிறுத்த வேண்டும். இந்த 'சோமாறி'கள் உலவுகிற மாவட்டத்திலேதான், நூறுமைல் வேகத்தில் கட்சி கரைகிறது என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது. "மேலாடை விழுந்தது எடு என்றுனும். அதற்குள் நாலாறு காதம் நடந்ததாம்" நளன் ஓட்டிய குதிரை. அது மாதிரி வேகத்தில் அல்லவா ஓடுகிறது, கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு! இந்த வேகத்தில் ஓடினுல் புறப்பட்ட மூலஸ்தானமாகிய மாஸ்கோவில் அல்லவா போய் நிற்கும்! கவனிக்க வேண்டும், கம்யூனிஸ்ட் நண்பர்கள்.

தோழர் ஜீவானந்தமும் தனது "ஊழிக் கால நாட்டிய"த்தை முடித்துக் கொள்ள வேண்டும். ஊரிலே நாட்டியக்காரிகள் ஏராளமாக இருக்கிறுர்கள்; இவர் வேறு ஏன் குதிக்கவேண்டும்! மற்றவர்களைக் காட்டிலும் ஜீவானந்தத்தைப் பற்றித்தான் நமக்குக் கவலை. "எவ்வளவு நல்ல மனிதர்; எவ்வளவு கெட்டுப் போய் விட்டார். எவ்வளவு புத்திசாலி, சு. ம. இயக்கத்திலிருக்கும் போது. இப்பொழுது எவ்வளவு மதி கெட்டு மந்தமாகி விட்டார்! காதுக்கு மெஷின் வாங்கியவர், மூளைக்கு மெஷின் வாங்கவில்லையே!" என்றெல்லாம் நாம் கவலைப்படுகிறோம்.

தி. மு. க. வில் பொருள் முதல் வாதம் இல்லையாம்! அட ஆண்டவன் ஆப் ரஷ்யா! கம்யூனிஸ்ட்கள் இப்படிச் சில வார்த்தைகளுக்குள்ளேயே கொள்கைகளை முடித்துக் கொள்கிறுர்களே! பொருளால் மட்டுமே தாழ்ந்து போனநாட்டிற்கல்லவா, பொருள் முதல்வாதம் தேவை! சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டு, அதன் காரணமாக பொருளில் தாழ்ந்தவர்களுக்கு 'பொருள் முதல் வாதம்' கருமாதி–கல்லெடுப்பு எதற்கு? வியாதிக்கு மருந்து கேட்டால், மருந்துக்கு வியாதி தேடுகிறுர்களே கம்யூனிஸ்ட் நண்பர்கள்' எவ்வளவு விளக்கம் சொன்னேம்; ஏறவில்லையே செவியில்!

* * *

என்னவோ தொலையட்டும்; "போம் போது அவளோடு போம்!" 'விநாசகாலே விபரீத புத்தி!

கெட்டிக்கார அயோக்கியர்கள்!

நியாய ரீதியாக இல்லாவிடினும், கொள்கை ரீதியாகவாவது கண்ணியமாக நடந்து கொள்ளாவிட்டால் தங்கள் சுயநல நோக்கம் நிறைவேருது என்ற சாதாரண விஷயம் கெட்டிக்கார அயோக்கியர்களுக்குத் தெரியும்.

—ஆ

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்:

"தென்றல்"

2, சண்முக முதலி தெரு, : : சென்னை–14.

இறந்தவன் பிழைப்பானு?

அமெரிக்காவில், பிரேஸிலுக்குப் பக்கத்திலுள்ள வெனிஸுலாவில் உள்ள அநாகரிக மக்கள் மிகவும் எளிய சுபாவமுடையவர்கள், அங்கேயுள்ள ஒரு சினிமாக் கொட்டகைக் காரரிடம் ஒரு சினிமாப் பிரதிநிதி சென்றுர். "கிளார்க் கேபிள் நடித்த புதிய படம் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன். வாடகைக்கு வாங்கிக் கொள்ளுங்கள்" என்று, பிரதிநிதி கூறினுர்.

கொட்டகை மானேஜர்: கிளார்க் கேபிளின் படமா? அவர்தான் இறந்துபோய் விட்டாரே!

பிரதிநிதி: எப்பொழுது?

மானேஜர்: 'பார்னெல்' என்ற அருமையான படம் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அது என்ன கொள்ளைப் பணம் தந்தது தெரியுமா?

பிரதிநிதி: ஆமாம். இதுவும் அதேமாதிரி பணம் தரும்.

மானேஜர்: அட போமய்யா! அந்தப் 'பார்னல்' படத்தில்தான் கேபிள் இறந்துவிடுகிறுனே; அந்தப் படத்துக்குப் பிறகு, கேபிளின் மற்றொரு படத்தைப் போட்டேன். ஜனங்கள் நம்பவேயில்லை. 'கேபிள்தான் அப்போதே இறந்துவிட்டானே இது வெறும் புளுகு வேறு யாரோ ஆசாமியை கேபிள் என்று சொல்லி ஏமாற்றுகிறுன்' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். படம் பார்க்க யாரும் வரவில்லை. எனக்கு ரொம்ப நஷ்டமாகிவிட்டது.

பூஜீன் பீல்டு பாடியது.

கண்ணும் பொன்னும்

* ஆமாம்: என் கண்ணும் பொன்னும்,
அவர்கள் கணநேரம் சும்மா இருப்பதில்லை.
வீடு முழுவதும் பாதச்சுவடுகள் தெரிகின்றன;
விளையாட்டுப் பொருள்கள் சிதறிக் கிடக்கின்றன;
சுவர் ஓரமெல்லாம் கை பட்டிருக்கின்றன.
ஆஹா, என்ன விளையாட்டு! எவ்வளவு கூப்பாடு!

* பத்துத்தரம் வந்து ரொட்டி கேட்பார்கள்;
அதில் வெண்ணெய் தடவச் சொல்வார்கள்;
வெண்ணெய்மேல் வெண்ணெய் அப்பச் சொல்வார்கள்;
அது போதாது, சர்க்கரையும் கேட்பார்கள்.
ஆனுல் என் கண்ணும் பொன்னும் அல்லரோ?
அவர்களுக்கு இல்லை என்றுகூற என்னுல் முடியாது,

* சில சமயம் துக்கமாய் வருவார்கள்; ஆறுதல் கூறுவேன்.
சில சமயம் சண்டையிட்டுக் கொள்வார்கள்; சமாதானம் கூறுவேன்
'ஐயோ' என் கண்ணும் பொன்னும் அப்படிச் சண்டையிடலாமா?
அது வேண்டாம்; விளையாடுங்கள்' என்று கூறுவேன்.

* ஐயோ! அவர்களால் எத்தனை தொல்லைகள்!
கையெல்லாம் கரியாக்கிக் கொள்வார்கள்;
பின்னிவிட்ட தலையைப் பிரித்து விடுவார்கள்;
பொம்மைகளை எங்கேனும் வைத்துவிட்டுப்
பொருமி அழுவார்கள்;
'அதைப் பார்', 'இதைப்பார்' என்று
அடிக்கடி வந்து இழுப்பார்கள்;
ஆடி ஓடி இடித்துக் கொண்டு,
'அங்கே நோவுது', 'இங்கே நோவுது' என்பார்கள்.
அவர்களுக்கு என்ன கவலை? அதெல்லாம்
அவர்களுக்கு விளையாட்டுத்தான், விநோதம் தான்.

* இன்றுகாலைதான் பாவாடை கட்டிவிட்டேன்;
இன்றுகாலைதான் சட்டை போட்டு விட்டேன்.
இப்பொழுது பார்த்தால்,
எத்தனை கிழிசல்; எத்தனை கீறல்!
இன்றுகாலை புதிசாயிருந்த பூட்ஸில்
இப்பொழுது எத்தனை துவாரங்கள்!
ஆமாம், என் கண்ணே! பொன்னே!
நீங்கள் தான் இத்தனை விஷமம் செய்வீர்கள்.

* ஆயினும் 'அவர்கள் இல்லாவிட்டாலோ....?'
என்று எண்ணுவேன்;
அவ்வளவுதான்; அன்பு பொங்கி விடும்.
அவர்கள் படுக்கையிடம் சென்று,
அவர்களது தலையைத் தடவிக்
கன்னங்களில் முத்தமிடுவேன்.
ஐயோ! கண்ணும் பொன்னு மில்லாதவர் வாழ்வு
என்ன வாழ்வு!

* ஆமாம், தரையெங்கும் அழுக்குக் கால் பட்டதுதான்;
ஆமாம், சுவரெங்கும் அழுக்குக் கை பட்டதுதான்;
ஆமாம், எத்தனையோ தொல்லைதான்,
எத்தனையோ விஷமங்கள்தான்.
ஆனுல். அதே அடையாளங்களை
என் இதயத்திலும் காணலாம்.
அவர்களால் அடையும் இன்பத்துக்கு
இணை வேறுண்டோ?

எண்ணம்

கண்ணதாசன்

"ஒழித்துக்கட்டுவேன்!"

"ஓட ஓட விரட்டுவேன்!"

—யார் சொன்னது இது? பழைய உழைப்பாளர் கட்சித் தலைவரும், நவீன காங்கிரஸ்காரருமான தோழர் ராமசாமி படையாச்சி, திண்டிவனத்திலே வெறிபிடித்துப் பேசிய பேச்சு இது! ஒழித்துக் கட்டுவாராம்!—முன்பு ராஜகோபாலாச்சாரி சொன்ன அதே வார்த்தை! இப்போது இவர் சொல்கிறார்! ஆச்சாரியாரின் விலாசம் இப்போது யாருக்கும் தெரியாது என்பதை இந்த 'கனம்' மறந்திருக்கிறார்; ஆகவே மிகவும் துணிச்சலோடு—சுற்றிலும் போலீஸ் பந்தோபஸ்தோடு—வன்னிய மக்கள் 'கவனிக்க' மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு பேசியிருக்கிறார்!

* * *

வன்னிய மக்கள் இப்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தலைவர் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் பதவி வேட்டையாட, வன்னிய மக்கள் கருவியாக இருக்கக் கூடாது. வன்னிய குலத்தை வாழ்விக்கவே பதவி ஏற்றேன் என்பது, தன்னலத்தை மூடும் சமாதானம் என்பதை வன்னியர் மறக்கக் கூடாது. புலியோடு ஓநாய் பதவி வகிப்பது கோழிக் குஞ்சுகளைக் காப்பாற்றத்தான் என்று எந்த மடையனும் ஒப்புக்கொள்ள மாட்டான். அதுவும் கணந்தோறும் புத்தி மாறும் ராமசாமி போன்றவர்கள் பணத்துக்கும் பெருமைக்கும் பதவி வகிக்கிறார்களே யன்றி, நிச்சயமாக வன்னியர்களைக் காக்க அல்ல!

* * *

சொல்லப் போனால், மந்திரிப் பதவி வகித்து வன்னிய மக்களைக் காப்பாற்றக்கூடிய அளவு ராமசாமி புத்திசாலியும் அல்ல. அதே இடத்தில் பேசிய விநயகம் எம். எல். ஏ.யைப் போல் இவர் 'மகா புத்திசாலி' அல்ல என்றாலும், கட்டுப்பாடாக மக்களை முன்னேற்ற, சக்திபடைத்தவர் அல்ல என்பது வன்னியருக்கே புரியும். இந்த இடத்திலே நின்று நிதானித்துப் பார்க்கவேண்டும் வன்னிய மக்கள்! தகுதி இல்லாத தன்னலக்காரரின், கட்சி மாற்றமும் புத்தி பேதமும் வன்னியருக்குக் களங்கத்தை உண்டுபண்ணுமேயன்றி லாபத்தைத் தராது.

* * *

"ராமசாமியார்" காங்கிரசில் சேர்ந்துவிட்டது பற்றி தி. மு. கழகத்திற்குக் கவலை யில்லை. ஆனால் காங்கிரஸைத் திட்டி ஓட்டு வாங்கியவர்—காங்கிரஸில் சேர்ந்த மாணிக்கவேலரைக் 'குலத்துரோகி' என்று திட்டியவர், இன்று பண்பற்ற முறையில் மாறி, வன்னியர்களைக் காட்டிக் கொடுக்கிறாரே என்பதுதான் நமது கவலை.

* * *

ஆகவே, இன்றும் சரி நாளையும் சரி, ராமசாமியார் நம்மை ஒழிக்கிறாரா, அல்லது அவரைப் போன்ற பதவி வேட்டைக்காரர்கள், 'இருந்த இடம் புல்முளைத்துப் போயிற்று' என்பதை நாம் கூறவேண்டாம்; சரிதம் அறியும்.

* * *

வன்னிய மக்களில் பெரும் பகுதியினர் கட்டுப்பாடாக தி. மு. கழகத்தை ஆதரிப்பவர்கள். நேற்றுவரையில் ராமசாமியாருக்கும் அது புரியும். இன்று அவர்களை மறந்து கூத்தாடுகிறார், பதவி ஆசையால் மனந்தடுமாறி அலையும் இவரை, ஏ! வன்னிய சமுதாயமே! உங்களுக்காகப் பாடுபட்டவர்கள் கேட்கிறார்கள்! 'கோவிந்தசாமி குரலில்'—வன்னிய மக்களிலே அறிஞர்கள், கலைஞர்கள் ஏராளமாக உள்ளனர். அப்படியிருக்க இந்தஆசாமியை ஏன் இன்னும் தலைவராகக் கொள்ள வேண்டும்!

* * *

ராமசாமியாருக்குப் பதவி ஆசை; ஆகவே காங்கிரஸில் சேர்ந்தார். ஆனால், தோழர் மகா புத்திசாலி விநாயகருக்குஎன்ன ஆசை? அடிப்பவர்க் கெல்லாம் தொண்டராகி, பிடிப்பவர்க் கெல்லாம் பெண்டாகி, இடத்துக்குத் தகுந்த பேச்சுப் பேசி, திவட்டி பிடிப்பதிலே தீராத ஆசை! எத்தனையோ மேடைகளில் நம்மவரோடு உறவாடினார்; பின்பு தமிழரசுக் கழகத்தில் தகரடப்பா தட்டினார்; காங்கிரஸ்காரர்களின் காலை வருடினார்; கல்வித் திட்டத்துக்குப் பல்லாண்டு கூறி, ஆச்சாரியாரைக் காக்கா பிடித்தார்; ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்தார். இப்போது—மேடைகளை பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்று எண்ணுகிறார்!

* * *

அரசியல் நேர்மை என்று ஒன்று உண்டு. அதைக் கடைப்பிடிப்பவர்கள் ஒரே கொள்கையில் உறுதியாக நிற்பவர்கள். அரசியலைப் பற்றி அவர்கள் தீர்மானமான முடிவுக்கு வந்தவர்கள் என்று பொருள். தமிழ் நாட்டு அரசியலிலே 'அந்தர் பல்டி' சர்வ சாதாரணமாக இருப்பதுபோல் வேறெந்த நாட்டிலும் காணமுடியாது! இதோ "பல்டி புகழ் மகா புத்திசாலி — எல்லோருக்கும் பொதுவானவர்— விநாயகர், நேர்மையற்ற அரசியல்வாதிக்கு உதாரணமாகக் காட்சியளிக்கிறார்.

* * *

"தி. மு. கழகத்தைத் தாக்கு தாக்கென்று தாக்கினார்; வெளுத்து வாங்கினார்" என்றெல்லாம் கூறுகிறார்கள், இவரது திண்டிவனம் பேச்சைப்பற்றி. நமக்கு ஒரு கவலை; நம்மிடமும் பதவியிருந்தால் இவருக்குக் கொஞ்சம் கொடுத்துக் 'கத்த' விடலாமே என்பதுதான் அந்தக் கவலை.

* * *

'ஏன் இவ்வளவு மோசமாக எழுதுகிறாய்' என்று கேட்பீர்கள். கண்ணியமாக—அண்ணாவைப் போல—எழுத வேண்டும் என்றுதான் பேனாவை எடுக்கிறேன். இத்தகையவரை நினைக்கும்போது நெஞ்சு பற்றி எரிகிறது! ஆகவே, இந்தச் சோற்றுத் துருத்திகளை அம்பலப்படுத்த வேண்டியிருக்கிறது.

* * *

எம். எல். ஏ. என்கிற தும்பிக்கை நிலைக்க வேண்டுமானால், விநாயகர் வாயை மூடிக் கொண்டிருப்பது நல்லது. பச்சோந்திகளுக்கு மற்றவர்களைப் பற்றிப் பேச அருகதை இல்லை. ஆகவே, "பேசாமலிருப்பது நல்லது; தும்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்வது நல்லது!" என்று எச்சரிக்கிறோம்!

தத்துவம்

குழந்தை: அம்மா! பறவைகள் எதையம்மா தின்னுகின்றன!

தாய்: பூச்சிகளையடா கண்ணே!

குழந்தை: பூச்சிகள் எதையம்மா தின்னுகின்றன?

தாய்: செத்த பறவைகளையடா, செல்வமே!

—மானிட்டர்

சிறு கதை லட்சணம்!

ஒரு பத்திரிகைக்கு என்ன சிறுகதையை அனுப்பினாலும் அது தமக்குத் திரும்பி வந்துகொண்டே யிருப்பதைக் கண்டார் ஒரு சிறு கதை ஆசிரியர். கடைசியில், "சிறு கதை என்றால் எப்படித்தான் இருக்கவேண்டும்?" என்று கேட்டு, பத்திரிகாசிரியருக்கு, அவர் ஒரு கடிதம் எழுதினார்.

பத்திரிகாசிரியரின் பதிலாவது: "சிறு கதைக்கு இவைதான் லட்சணங்கள்: 1. சிறியதாய், நறுக்குத் தெறித்தாற்போல் இருக்க வேண்டும்; 2. மதம் கொஞ்சம் கலந்திருக்க வேண்டும்; 3. பணக்கார வாழ்வைப் பற்றிச் சிறிது பிரஸ்தாபம் வேண்டும்! 4. செயல் இருக்க வேண்டும்: 5. சிங்கார ரஸம் ததும்ப வேண்டும்."

உடனே கதாசிரியர் எழுதியனுப்பினார் இந்தச் சிறு கதையை: "'அட ஈசுவரா!' என்ற சீமாட்டி, 'என்னை ஏன் இப்படி நிமிண்டி விடுகிறீர்கள்?' என்று கத்தினாள்."

என்றுமழியாப் பிரசித்தி பெற்ற சில சரித்திர புருஷர்கள், உயரமில்லாத குள்ளர்களாவர். இதோ பாருங்கள்:

	அடி	அங்
ஜூலியஸ் ஸீஸர்	5	2
நெப்போலியன் போனபார்ட்	5	1
மகா அலெக்ஸாந்தர்	5	3
லெனின்	4	11
ஸன்யாட் ஸென்	5	0
தளபதி போதா	5	1

கோட்டைகளின் கதை 1.

பொருள் தேடவந்தோர்

இப்பொழுது நமது 'கதர்ச் சட்டை அண்ணுச்சிகள்'—அவர்கள்தான் காங்கிரஸ் மந்திரிகள் — காரியாலயமாய், அரசாங்கக் காரியதரிசிகள், அவர்களது பரிவாரங்களின் அலுவலகமாய், பட்டாளப் பகுதியின் படைவீடாய் எல்லாம் திகழ்ந்து, மண் மூடிய மதிட் சுவர்கள், துருவேறிய இரும்புக் கிராதிகள், 'கேட்டு' கள், தூர்ந்துபோன அகழிகளுடன் காட்சிதரும் ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை உருவாகி, உரம் பெற்ற கதை சுவராஸ்யமானது.

கதை என்றதும் பலருக்கு மதுரநாடோடிப் பாடகர்களின், "ஆட்டுத் தோலுக் கிடங்கொடுத்ததாலே, அனர்த்தம் தேடிக்கிட்டான்" என்ற பாடலின் வரிகள் ஞாபகம் வரலாம். ஆட்டுத் தோலைக் காட்டி, அதவ்வளவு இடம் வேண்டும் என்று கேட்டு, அதன் பின்பு அந்தத் தோலை மிக மெல்லிய வார்களாக நறுக்கி, முடிபோட்டு, அவ் வாரின் சுற்றளவிற்குள் அடங்கிய பகுதியைத்தான் கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பில் பேரம் பேசிய வெள்ளையன் தானமாகப் பெற்ருன் என்ற விவரம் சரித்திரத்தில் இடம் பெறவில்லை. ஆனல் ஒண்ட வந்த பிடாரிகள் ஊர்ப் பிடாரிகளைப் பம்மச் செய்து ஊராள்வோராக மாறிய கதை—கூடாரத்திற்குள் இடம் கேட்டு நுழைந்த ஒட்டக வியாபாரியை வெளியே தள்ளிய விதத்தில் நடைபெற்ற விருத்தாந்தம் —சரித்திரத்தில் காணக் கிடக்கிறது.

அந்தக் காலத்திலே ....

ருசியான உணவு சமைத்து உண்ண ஐரோப்பியரும் ஆங்கிலேயரும் கற்றுணர்ந்த சமயம் அது. வெறும் இறைச்சியையும் ரொட்டியையும் தின்று கொண்டிருந்தவர்கள் மென்று தின்னும் இறைச்சிக்கு காரமேற்ற மிளகு பேருதவி செய்வதை உணர்ந்த காலம். எனவே மிளகு போன்ற கறிப்பொருள்களுக்கு ஐரோப்பாவிலும். இங்கிலாந்திலும் ஏகப்பட்ட கிராக்கி. இங்கிலாந்து தனக்குத் தேவையான மிளகை போர்ச்சுக்கல்லிலிருந்துதான் வாங்க வேண்டியிருந்தது. போர்ச்சுகீஸிய வர்த்தகர்கள் மூலம் போய்க்கொண்டிருந்தது. அந்தக் காலம் பதினரும் நூற்ருண்டு. எட்டாவது ஹென்ரியும் அவனுக்குப் பின் எலிஸபெத்தும் அரசாண்ட சமயம். ஆங்கில மக்கள் ஆட்டு ரோமத்தால் ஆன ஆடைகளையே பெரிதும் அணிந்து வந்தனர். பணத்திலே புரள வசதி படைத்த சீமான்கள் பட்டும், லினனும் கட்டி மகிழ்ந்தனர். ஏழைகளுக்கு அவை கட்டி வராத, கிட்டாத பொருள்களாகவே திகழ்ந்தன. மேலே அணியும் ஆட்டு ரோம ஆடைகளுக்கு அடியில் வேறு துணி அணிய வகையில்லாமலே அநேகர் இருக்க நேர்ந்தது. எனவே, அந்தச் சமயத்தில் மலிவான உடைகள் தயாரிப்பதற்காக பருத்தி பெரிதும் தேவைப்பட்டது. அமெரிக்கா அந்த நாளில் பருத்தி பயிரிடத் தொடங்கவில்லை. இந்தியாவை—குறிப்பாகத் தென்னிந்தியாவை விட்டால், பருத்திக்கு வேறு இடம் இல்லை என்ற சூழ்நிலை நிலவியது.

எனவே ....

இந்தியாவுடன் தொடர்புகொண்டிருந்த போர்ச்சுகீஸிய வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தைப் பொன்னுக்கிக் கொள்ளை லாபமடித்தனர். இதைப் பார்த்த பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. லண்டனிலுள்ள சில வர்த்தகர்கள் கூடி கிழ்த்திசை நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொள்வதற்காக ஒரு கம்பெனி நிறுவினர்கள், அந்தக் கம்பெனிதான் 1600-ம் ஆண்டில் ஸ்தாபிதமான ஈஸ்ட் இந்தியா கம்பெனி.

ஆங்கிலேயர்களுக்கு உதயமான யோசனை போலவே டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்களுக்கும் யோசனை உதித்தது.

அந்தக் காலத்தில் இந்தியாவிற்குக் கடல் கடந்து வருவது என்பது சுலபமான காரியமல்ல. சிறு பாய்மரக் கப்பல்களில் ஆப்ரிக்காக் கண்டத்து நன்னம்பிக்கை முனையைச் சுற்றிப் பிரயாணம் செய்துவரவேண்டும். கடற் கொள்ளைக்காரர்கள், புயற் காற்று போன்ற ஆபத்துக்களுடன் சாப்பாடு, குடி தண்ணீர்ப் பிரச்னைகளையும் சமாளிக்கப் பெரும் பாடுபடவேண்டும்.

ஆனல் செயற்கரும் செயல் செய்யவேண்டும் என்ற சிந்தனையிருந்தது அவர்களிடம், அச் சிந்தனையைச் செயலாக்கும் துடிப்பு இருந்தது. தீரம் இருந்தது. அவர்கள் வந்தார்கள்.

1612-ம் ஆண்டில் சூரத்திலும் *1616*-ல் மசூலிப்பட்டிணத்திலும் *1626*-ல் புலிக்கட்டத்திலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் கிளைகள் அமைக்கப்பட்டன,



ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை

புவியாண்ட விந்தை!

கோட்டை பிறந்த கதை.

1639-ம் ஆண்டில் பிரான்ஸிஸ் டே என்பவர் இன்னும் தெற்கே வந்தார். கூவம் நதிக்கும், கடலுக்கும் இடையே பரவிக்கிடந்த பிராந்தியத்தைப் பார்த்ததும் இந்த இடத்தில் ஒரு கோட்டை அமைக்கலாம் என்ற எண்ணம் பளிச்சிட்டது அவருக்கு. அதுவரை, கம்பெனிக்குச் சொந்தமாக இந்திய மண்ணில் இடம் எதுவும் இருக்கவில்லை. இடம் பெற வேண்டும், அங்கு கோட்டை கட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியவுடன் சந்திரகிரி அரசனைப் பார்த்து அந்த இடத்தில் கம்பெனிக்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் கட்ட அனுமதி வாங்கிவிட்டார் பிரான்ஸிஸ் டே.

"அபிப்பிராயங்கள் மின்னல் வேகத்தில் மாறும் தன்மையன. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிவிட்டால் பின்பு சந்தர்ப்பத்தைத் தேடி நீ ஓட நேரிடலாம். ஓடினலும் கிட்டுமா என்பது சந்தேகமே!" என்பது ஒப்பந்தத்தை முடித்துத் திரும்பிய அவர், தம் சகாவிடம் கூறிய வார்த்தைகள்.

கோட்டை கட்டுவதற்கு வேண்டிய உதவிகள் செய்வதாக வாக்குறுதி கொடுத்த ராஜா அதைப் பின்பு மறந்துவிட்டார். இருந்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டிடங்கள் கட்டி பதிமூன்று வருஷங்களில் ஒரு சிறு கோட்டையை ஸ்தாபித்து விட்டனர் கம்பெனியார். *1653*-ம் வருஷத்தில் கோட்டை அமைந்துவிட்டது. இன்றைய அரசாங்கக் காரியாலயம் அமைந்திருக்கும் கட்டிடம் பிரான்ஸிஸ் டே அமைத்த கட்டிடம்தான். அந்தக் கட்டிடத்திற்கு வடக்கு திசையில் சில சிறு கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. அவற்றைத் தவிர சுற்றுப்புறத்தில் வேறு கட்டிடமே கிடையாது. இப்பொழுது பட்டாள உபயோகத்திற்காக உள்ள பகுதியெல்லாம் அந்தக் காலத்தில் ஆறு ஓடும் ஸ்தலமாக இருந்தது. ஓயாது, ஒழியாது அலை கீதம் இசைக்கும் கடல் கோட்டைக்கு மிகவும் அருகாமையில், இப்பொழுது ரஸ்தா நீண்டு நெளியும் பகுதி வரை பரவியிருந்தது.

வளர்த்த விதம்

கட்டிடங்கள் அதிகரிக்க மேலும் இருபது வருஷ காலம் பிடித்தது. ஆற்றையடுத்து வீடுகளும், காம்பவுண்டுச் சுவர்களும் எழுந்தன. வடபுறத்தில் சாமான்கள் போட கிடங்குகள் அமைக்கப்பட்டன. மூன்று புறமும் மதிற் சுவர்கள் கட்டப்பட்டன.

1672-ல் எலிஹுயேல் என்ற கம்பெனிச் சிப்பந்தியும் சிலரும் வேதக் கோயில் ஒன்று அமைக்கத் திட்டமிட்டனர். அப்பொழுது ஸ்ட்ரேன்ஹாம் மாஸ்டர் என்பவர் கவர்னராயிருந்தார். திட்டம் நல்லதுதான் ஆனல் லாபகரமாயிருக்காத இந்த செலவினத்திற்கு இங்கிலாந்திலுள்ள கம்பெனி டைரக்டர்கள் அனுமதியளிப்பார்களா என யோசித்தார் அவர். கடைசியாக, அனுமதி கேட்டு இல்லை என்று ஆனபின்பு, உத்திரவை மீறுவதை விட, உத்திரவு பெருமலே காரியத்தை முடித்துவிடுவது என நிச்சயித்தார். நன்கொடை வசூலித்து அர்ச் மேரி ஆலயத்தை அமைத்தார்கள். ஆலயம் அமைந்து முடிய இரண்டு வருஷங்கள் ஆயின. ஆசியாவிலேயே புராதனமான வேதக் கோயில் இந்த மாதா கோவில்தானும்.

1710-ல் வீடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாயிற்று. உட்புறத்தில் ஒரு சிறு நகரமே ஸ்தாபிதமாகி விட்டது.

1710 முதல் *1746* வரை வர்த்தகம் உச்சநிலையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடையிடையே போட்டி, பொருமை காரணமாக எழுந்த பூசல்சள். ஆரம்ப காலத்தில் தங்களுக்குள் சண்டையிட்ட ஹிந்து ராஜாக்கள், அதன் பின்பு வடக்கிலிருந்து வந்த மகமதியர்கள் இவர்களுடன் ஏதாவது ஒரு கட்சியுடன் சேர்ந்ததால் ஏற்பட்ட தொல்லைகள். பாண்டிச்சேரியிலிருந்து பிரெஞ்சுக்காரர்களின் படையெடுப்பு வேறு. இங்கிலாந்திற்கும், பிரான்ஸிற்கும் ஐரோப்பாவில் யுத்தம் மூள வேண்டியதுதான், இங்கும் ஆங்கிலேயருக்கும், புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காராகளுக்கும் சண்டை துவங்கிவிடும். கோட்டையைப் பாதுகாக்கும் செலவு அதிகரிக்கும். அதிகச் செலவிற்கான காரணத்தை லாபமே குறிக்கோளாகக் கொண்ட, லண்டன் கம்பெனித் தேவதைகள் ஏற்றுக் கொள்ள முணமுணக்கும்,

கோட்டையின் மேற்குப்புறப் பாதுகாப்பு பலவீனமாயிருந்தது. வடபுறம் எழுந்து நிரவியிருந்த வீடுகள் எதிரிகள் பதுங்கிப் பாயப் பேருதவி செய்வனவாயிருந்தன. மேற்கே ஓடிய ஆறு அகலமானதாக, அழகு தரும் சூழ்நிலையாக அமைந்திருந்ததே ஒழிய ஆழமாக பகைவர்

கடந்து வருவதைத் தடுப்பதாக இல்லை. மதிற் சுவர்கள் எழுப்ப ஆழமான அகழிகள் வெட்ட, பீரங்கிகள், தளவாடங்களால் கோட்டைக் காவலை பலப்படுத்த எல்லாம் 'பைஸாக்கள்' செலவிடாமல் முடியுமா? ஆதாயத் தொகை அதிகரிப்பிலேயே ஆவலாக இருந்த அதி தேவதைகளுக்கு அது தெரியவில்லை.

கோட்டையிலிருந்த வீரர்கள் பலர் அதுபற்றிக் கவலையில்லாமல் இருந்தாலும் சிலர் சிந்தனை செய்தார்கள் என்பதை ஒரு ஆசிரியர் எழுதியுள்ள கீழ்க் கண்ட சம்பாஷணை மூலம் அறிய முடிகிறது.

"செங்கற்பட்டு ரோடில் நடைபெற்ற வீர விளையாட்டு பற்றி நீ என்ன எண்ணுகிருய்?

"வீர விளையாட்டா, சரிதான் போ! முதுகுத் தோல் உரிபடாமல் தப்பிவந்த பாடு பெரும்பாடாய்ப் போய்விட்டது. பதுங்கிப் பாயும் பெருச்சாளிகளின் தொல்லைகளுக்கு முடிவு கட்டும் ஏற்பாட்டைக் காணேம். கம்பெனிச் சரக்கைப் பறிகொடுத்து விட்டேன் என்ற குற்றச்சாட்டுக்கு மட்டும் குறைவில்லை. இந்த நாட்டை நமதாக்கி நம் ஆட்சியை நிலைநாட்ட வேண்டியது அவசியமாகிவிட்டது."

"அடாடா, எவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டாரடா இவர்! அதற்கு எவ்வளவு செலவாகும்? அதை யார் கொடுப்பது? கம்பெனியின் லாபம் கம்மியாக ஆரம்பித்தால் சீமையில் உள்ளவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா?

"ஆதாயத்தைத் தவிர அந்த அதி தேவதைகளுக்கு வேறு என்ன தெரியப் போகிறது?"

"வேறு என்ன தெரிய வேண்டும்? தேடு லாபம். அதையும் எவ்வளவு சீக்கிரமாகச் சேர்க்க முடியுமோ; அவ்வளவு சீக்கிரத்தில் சேர்; அதுதான் அவர்கள் உபதேசமாயிருக்கும்"

"அதற்காகாக மட்டும்தாஞ நாம் இங்கிருக்கிறேம்?"

"பின் எதற்காகவாம்"

"நாம் இந் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. அவர்களுக்காக ஒரு நல்ல அரசாங்கம் அமைத்து அமைதியான வாழ்விற்கு வழி வகுக்க வேண்டும்."

"பட்டாளம், படைத்தலைவர்களைப் பயன் படுத்தி நாட்டை அடிமைப் படுத்தத் திட்டமா? நல்ல கனவப்பா! நமது எஜமானர்கள் விரும்புவதெல்லாம் வியாபாரம்தான். உன் யோசனை ஒன்றும் அவர்களுக்குப் பிடிக்காது. புறப்படு, சாராயக் கடைப் பக்கம் போவோம். நல்ல சரக்கு வந்திருக்கிறதாம். இரண்டு கிளாஸ் உள்ளே தள்ளலாம்."

இந்தச் சூழ் நிலையிலும், எழுபத்தைந்து வருட காலமாக ஏகாதிபத்தியத்திற்காக ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக் காரருக்கும் நடைபெற்ற போட்டிப் போர்களிடையேயும் கோட்டை படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது.

1746-ம் ஆண்டில் மேற்குப் பக்கத்தில் மதிற்சுவர் அமைக்கப்பட்டது. வட புறத்தில் கோட்டையை ஒட்டி இருந்த வீடுகள் அகற்றப்பட்டன.

1743-ம் வருஷம் தென்னிந்தியாவில் கர்நாடக நாவப் ஸ்தானத்திற்காக இருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரான முகமதலியை ஆங்கிலேயர் ஆதரித்தனர்.

ராபர்ட் கிளைவ்

இச் சந்தர்ப்பத்தில் தான் இந்தியாவிற்கு ராபர்ட் கிளைவ் வந்து சேர்ந்தான். துள்ளித் திரிகின்ற காலத்தில், துடுக்குத் தனத்திற்குக் கடிவாளம் போடாமல், கட்டுக்குள் அகப்படாத குதிரையாக கிளைவ் திரிந்த கதை உலக மறிந்தது. துஷ்டப் பிள்ளையைத் தூரம் தொலைவிற்கு அனுப்பி வைப்பதே மேல் எனத் தீர்மானித்த பெற்றேர் அனுப்பி வைக்க, மார்க்கெட் ட்ரேட்டன் என்ற கிராமத்தை விட்டு இங்கு வந்து சேர்ந்தான் அவன். கம்பெனியில் ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது. கடிதங்கள் எழுதுவதிலும், கணக்கு வழக்குகள் பார்ப்பதிலும் பொழுதுபோக்குவது என்பது ஆரம்பம் முதலே அவனுக்கு வேம்பாக விருந்தது.

பட்டாளத்து நண்பர்கள் பாடு தேவலை என்று பட்டது அவனுக்கு. ஒழிந்த வேளைகளில் சொந்த வியாபாரத்தில் ஈடுபட்டு பணம் சேர்க்கும் வசதி பட்டாளத்திலுள்ளவர்களுக்கு இருந்தது. தானும் ஒரு வீரனுல் வாய்ப்பு அதிகம் கிட்டும் என எண்ணிய க்ளைவ் உடனேயே ஒரு விண்ணப்பம் போட்டு வைத்தான்.

'சிவப்பு நாடாத்தனம்' என்பது இன்று நேற்று நிலவியதல்ல தொன்று தொட்டே இருந்து வருவதுதான். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகியும் கூட க்ளைவின் விண்ணப்பத்திற்குப் பதில் வரவில்லை.

பாமரர்கள், சோதாக்கள், சோம்பேறிகள், போக்கிரிகளாகச் சிறைக்கனுப்பப்பட்டு, பின்பு பட்டாளத்து வீரர்களாக கப்பலேறி வந்திருந்த படை வீரர்களுக்கு, குஷியாகக் குடிப்பதும் வேசி லோலர்களாகத் திரிவதுமே சொர்க்க வாழ்வாகப்பட்டது. அவர்கள் அதிலேயே திருப்தியடைந்து விட்டார்கள். அதைக் கண்டு குமைந்த க்ளைவ் அவர்களைவிட்டு ஒதுங்கி தனியனுய் வாழ்ந்தான். புத்தகங்கள் பல இரவலாகப் பெற்றுப்படித்து அறிவை விசாலமாக்கினுன். சிந்தனையிலேயே காலம் கழித்தான்.

எதிர்பார்த்த பதவி கிட்டுவதாகத் தோன்றவில்லை. தனிமை வாழ்வு பெரும் சுமையாக விளங்கிற்று. மனம் விட்டுப் பேசி, தனது ஆசைகள் லட்சியங்கள் பற்றிதான் சொல்வதைக் கேட்டு அவற்றைப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு ஆத்மாவின் நட்பிற்காக ஏங்கியது அவன் உள்ளம். சூழ்நிலையில் வெறுப்புற்ற அவன் ஒரு சமயம் தற்கொலை செய்துகொள்ள முயன்ருன். துப்பாக்கியால் சுட்டுக் கொண்டான், ஆனுல் குறி தவறிவிட்டது. தன்னுல் ஆக வேண்டிய மகத்தான காரியம் ஏதோ இருக்கிறது, அதனுல்தான் குறி தவறிவிட்டது என நம்பினுன் அவன்.

கன்னி ஒருத்தியின் கவர்ச்சி மிகு வதனம் — அது அவன் ஊரில் பார்த்தவளுடைய முகமாக இருக்கலாம் — அடிக்கடி அவன் அகக் கண் முன் காட்சியளித்துக் கொண்டேயிருந்தது. மேஜை முன் அமர்ந்து பட்டியல்கள், சிட்டைகளில் கவனம் பதிக்க முயல்வான். அவன் உள்ளம் கொள்ளை கொண்ட கள்ளியின் முகம் அவற்றில் தோன்றி அவனை வாட்டும். பார்வையை வேறுபக்கம் திருப்புவான். அங்கு குவிக்கப் பட்டிருக்கும் சரக்குகளின் மத்தியில் அவள் எழில் உருவம் தெரியும். 'சே, என்ன தொல்லை இது?' என்று எழுந்து போவான்.

* அண்ணுவின் பெரும் பயணம்;
* சிறை கண்டேன் தோழீ நான்;
* மாஸ்கோவா, காஞ்சீபுரமா
முதலிய கட்டுரைகள்
ஜூலை 15உ முதல் வெளிவரும்

எட்மண்ட் மாஸ்கலீன் என்று க்ளைவிற்கு ஒரு நண்பன். மனநிலை சரியில்லாதவனுக ஒரு நாள் அவன் அறைக்குப் போனுன் க்ளைவ். அப்பொழுதுதான் அந்த நண்பன் அறையிலுள்ள சாமான்களை ஒழுங்காக அடுக்கிவைத்துக் கொண்டிருந்தான். அங்கு கிடந்த ஒரு அழகியின் படத்தைக் கண்டதும் க்ளைவ் திகைத்து நின்றுவிட்டான். அவன் மனம் கவர்ந்த கன்னியின் சாயலை ஒத்த உருவப் படம் அது.

"என்ன ஒரு மாதிரி இருக்கிருய்? கிட்டங்கியில் எதாவது தகராறு? கணக்கில் தப்பு ஏற்பட்டு விட்டதா?" என்ருன் நண்பன்.

"ஒன்றுமில்லை! எனச் சொல்லி வெளியேறி விட்டான் க்ளைவ்.

எட்மண்டிற்கு நண்பனின் குணம் தெரியும். அதனுல் அவன் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. பின்பு ஒரு நாள் கிளைவ் தானுகவே எட்மண்டிடம் அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்று கேட்டான்.

"நீயும் அந்த மோகினி மாயையில் சிக்கிவிட்டாயா? எட்டாக் கனியான அவளைப் பற்ற பணக்காரனுகவும், புகழ் மிகுந்தவனுகவும் நீ ஆக வேண்டுமே!" என்ருன் நண்பன்.

க்ளைவ் அந்தப் பேச்சால் கலங்கிவிடவில்லை. ஒன்று பணம் போதுமான அளவு சேகரித்துக் கொண்டு இங்கிலாந்து செல்ல வேண்டும்; அல்லது அதிகப் புகழ் தேடி அப் புகழ் மூலம் அவளை இங்கு இழுக்க வேண்டும் என்று தீர்மானித்தான். அத் தீர்மானமே அவனது இலட்சியமாகி அடுத்த ஐந்து வருஷங்களில் அவன் சாதித்த செயல்களுக்குத் தூண்டு கோலாயிருந்தது.

1744-ல் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் ஐரோப்பாவில் யுத்தம் மூண்டது. கோட்டையிலிருந்து கிளம்பிய கப்பற் படை புதுச்சேரியைத் தாக்கியிருக்கும். அதற்குள் மழையும் புயலும் வந்துவிடவே கப்பற் படை சுமாத்ரா தீவுகளை நோக்கிப் போகவேண்டியதாயிற்று.

1746-ல் டூப்ளே ஒரு கப்பற் படையுடன் வந்து தரையிலிருந்தும் கடலிலிருந்தும் தாக்கிக் கோட்டையைக் கைப்பற்றினுன். க்ளைவ் கைது செய்யப்பட்டான். மூன்று வருஷங்கள் கோட்டை பிரெஞ்சுக்காரர்கள் ஆதிபத்தியத்திற் குட்பட்டிருந்தது. அவர்கள் வடபுறமிருந்த வீடுகளை அகற்றி, அவற்றை இப்பொழுது எஸ்பிளனேட் பாரி கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்திலிருந்து மேற்கு நோக்கி அமைக்கப் ஏற்பாடு செய்தனர்.

[8-ம் பக்கம் பார்க்க]

அகிலம் புகழும் 5-வது வாரம் 25—6—54 முதல்
★ சேலம் பேலஸில் ★
தினசரி 2 காக்ஷிகள்
பிரதி, சனி, ஞாயிறு, அமாவாசைகளில் மாட்னி உண்டு
சொர்க்க வாசல்............
அதிலே மதியூகன் மதிவாணனின் மதுர கீதம் மக்களின் மனதை பறி கொடுக்கச் செய்யும் — அருள் சீட்டிற்கு அள்ளி வீசப்படும் வெள்ளிக் காசுகள் — என்பது அருமறையானந்தரின் அருமையான திட்டம்
ஆனுல்!
எரிமலையெனக் கிளம்புகிருன் மதிவாணன் நாற்றமெடுக்கும் நரகத்தை காண்கிருன் — சொர்க்க வாசல் சோற்றுத் துருத்திகளுக்குத்தான் என்பதை உணருகிருன்—மன்னனின் கவியான அவன், மக்களின் கவியாக மாறுகிருன். வெற்றி முரசு கொட்டுகிறது—அதிலே வெற்றி வேலனின் முடிவைக் காண்கிருன்.
பரிமளா பிக்சர்ஸ்
சொர்க்கவாசல்
வருகிறது! ஏ. வி. எம். பெண்

தேசத்தை வாழ்வித்தான் டால்ஸ்டாய்!

[கலைக்காகவும் நாட்டுக்காகவும் தியாகம் செய்தவர்கள் பலர். அவர்களது சந்ததிகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை. அந்த உத்தமர்களின் சந்ததிகள்......ஐயோ! என்ன கோரம்! பிச்சை எடுக்கின்றனர்; திருடி வயிறு கழுவுகின்றனர்! ரஷ்யக் கலைஞனின் பேரனே திருடிவிட்டு சிறையிலிருந்தான்! பிரெஞ்சு சிறையிலிருந்த அவன் 1937-ம் ஆண்டு செப்டம்பரில்—சொன்ன சோகக் கதை இது. 'ஃரிபான்' என்ற பிரெஞ்சுப் பத்திரிகை இதை வெளியிட்டது.]

நான் ஓர் அநாதையாய் நடுத்தெருவில் விடப்பட்ட சிறுவன். 1921-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 28வ பியாரிட்ஸ் என்னும் ஊரில் பிறந்தேன்.

என் தாயின் அன்பையோ முத்தங்களையோ நான் அறியேன் நான் பிறந்தவுடனேயே, என் தாய் என்னை ஓர் அநாதை விடுதியில் விட்டுவிட்டாள். என் பெற்றோர்களுக்குள் ஒற்றுமையில்லாமல் போகவே, குடும்ப வாழ்க்கை சகிக்க முடியாமலிருந்தது. ஒரு நாள் என் தந்தையும் தாயும் விவாக ரத்து வழக்காடினார்கள். வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்ட கணமே, என் தாய், தாய்க்குரிய உரிமைகளை இழந்தாள். என் தகப்பனோ – அவன் பாரிஸ் நகரில் ஓர் எழுத்தாளனாக இருந்ததாகக் கேள்வி—என்னைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல், அயல் நாடு சென்றான்.

இவ்விதம் அனாதையான நான், என் மூன்றாம் வயதிலேயே இவ்வுலகில் தன்னந்தனியனானேன்.

ஆனால், என் பாட்டியான ஒல்கா கோல்ஸ்கி, என்னை விடுதியிலிருந்து மீட்டு, தன்னிடமே வைத்துக்கொண்டு, பராமரித்து வந்தாள்

பதின்மூன்று வருஷங்கள் என் அருமையான பாட்டியுடன் இருந்தேன்.

நானும் அவளும் நீஸ் நகரில், ரிவோலி என்ற தெருவில், ஒளி மிகுந்ததொரு வீட்டில், குடியிருந்தோம். சாளரச் சாய்ப்பில் ஒரு சிறு தோட்டம் அமைத்து, அங்கே பயிரான பூக்களுக்கு. நான் அற்புதமான பெயர்கள் வழங்கினேன்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. மாலை வந்தவுடன் திறந்த ஜன்னலுக்கு முன் என் பாட்டி என்னைத் தன் மடியில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு, ருஷியமும் பிரஞ்சும் கலந்ததொரு கதம்ப மொழியில் அழகிய சீமாட்டிகளைப் பற்றியும் சுந்தரக் கோமான்களைப் பற்றியும் கதைகள் சொன்னாள்.

எனது புகழ்பெற்ற பாட்டனாரைப் பற்றியும் அவருடைய குணாதிசயங்களைப் பற்றியும் அவர் எழுதிய நூல்களைப் பற்றியும், பின்னொரு நாள் பெருமையுடன் பேசினாள்.

என்னை அன்போடு அணைத்துக்கொண்டு, "நீயும், உனது உத்தமமான பாட்டனாரைப் போல, நல்லவனாயும் யோக்கியனாயும் இருக்க வேண்டுமென்றே என் விருப்பம்" எனக் கூறினாள்

ஐயோ! அவளது விருப்பம் நிறைவேறவில்லை; நான் யோக்கியனாகவில்லை. அவளது விருப்பத்துக்கு நேர் மாறாக, நான் ஒரு கள்ளனாயிருக்கிறேன்!

எனது பதின்மூன்றாம் வயதில் என் பாட்டி உயிர் துறந்தாள். நான் கண்ணீர் விட்டழுதேன். எனக்கு இனிக் கடுமையான சோதனைகள் வர விருக்கின்றன வென்றும் அவற்றால் வீழ்ச்சியடையாமலிருக்கப் பெருவலிமை வேண்டுமென்றும் உணர்ந்தேன்.

என் பாட்டியைப் பறிகொடுத்தவுடனேயே, சிடுசிடுத்த முகங்கொண்ட கனவான் ஒருவர், என் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக்கொண்டு, என் அழுகையையும் கூக்குரலையும் சிறிதும் சட்டை செய்யாமல் என்னை ஓர் அனாதை விடுதிக்கு மீண்டும் அழைத்துச் சென்றார்.

நாள் ஆக ஆக எல்லாம் பழகிப் போய்விடுமென்று எனக்குள்ளே நான் ஆறுதல் கூறிக் கொண்டேன்,

என் பாட்டி என்னை அன்புடன் வளர்த்துவந்த போது, நான் பள்ளியில் படித்தேன், அனாதை விடுதியில் பள்ளிக்கூட இறுதிப் பரீட்சையில் நான் தேறி யோக்கியதா பத்திரம் வாங்குவதற்கு அதுவே உதவியாயிருந்தது.

இதுவரையில் எல்லாம் சரியாகவே நடந்தது. நான் பூரண சந்தோஷத்தோடு இராமல் போனாலும் துக்கப்பட்டுக்கொண்டு இருக்கவில்லை. பின்பு, விடுதியின் காரியஸ்தர்கள் என் கல்வித் தேர்ச்சியை மதிக்காமல், நீஸ் நகரத்திற்கு அடுத்தாற்போலுள்ள எங்காரென் என்னும் ஊரில் பயிர்ச்சீவனம் செய்து வந்த அர்மானே தம்பதிகளிடம் என்னை வேலைக்கு அமர்த்தினார்கள்.

அதுவே என் வாழ்க்கையை நிலை குலைத்து, நான் இன்றுள்ள அபாக்கிய நிலைக்கும் என்னைக் கொண்டுவந்து விட்டது.

அர்மானே தம்பதிகள் நல்லவர்கள்தான். ஆனால் பயிரிடுவோருக்கு உள்ள முரட்டுச் சுபாவம் அவர்களிடமும் இருந்தது. அவர்கள் என்னைக் கடினமாக நடத்தியதைப் போல, என் புத்திக்குப் பட்டது. பார்க்கப் போனால் அவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லையென்றே சொல்லவேண்டும்.

ஆரம்பத்திலிருந்தே நான் நிலத்தை வெறுத்தேன். அந்த வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. பல தடவை என் மனோபாவத்தை என் எஜமானர்களுக்கு அறிவித்தேன். ஆனால், அவர்கள் என்னைக் கேலி செய்தும் கோபித்தும் வந்தார்கள், ஒரு நாள் நான் நல்ல குடியானவனாகப் போய்விடுவேன் எனக் கூறினார்கள்.

இவ்விடத்தை விட்டு ஓடிப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக உருவெடுக்க ஆரம்பித்தது. சுயேச்சையாகவும் யாதொரு பலவந்தமுமில்லாமலும், என்னுடைய இஷ்டப்படி வேலை செய்ய விரும்பினேன். அது வீண் கனவு என்று இன்றுதான் உணர்கிறேன். ஆனால், அந்தக் காலத்தில் ஆச்சரியச் செயல்களைப் பற்றிய கதைகளைப் படித்து என் தலை திரும்பியிருந்தது. அதிருஷ்டத்தையும் புகழையும் நோக்கி நான் சென்று கொண்டிருந்ததாக, அப்போது என் எண்ணம்.

நல்ல நிலையிலுள்ள சிறுவர்கள் இத்தகைய கதைகளைப் படிப்பது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காக இருக்கலாம். ஆனால், ஒன்றுமில்லாத சிறுவர்களும் எதிர்காலத்தில் நன்னிலைக்கு வர எவ்வித ஏதுவுமில்லாதவர்களும் இந்தக் கதைகளைப் படிப்பது அவர்களுக்கு ஆபத்தாகவே முடியும். ஏனெனில், இவை கனவு உலகத்திற்கு வழி திறந்து விடுகின்றன. அக்கனவுகளைப் பூர்த்தி செய்ய முடியாமலிருக்கையில், அவைகளை அலட்சியம் செய்ய வேண்டும். கதைகளில் வரும் கதாநாயகர்களைப் போல நடக்க விரும்பியதால்தான், நான் இன்று சிறைவாசம் செய்கிறேன்.

கடைசியாக, நான் ஊரைவிட்டு ஓடிவிடத் தீர்மானித்தேன். அது தீர ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயமென்பதை, நான் அறிந்து கொள்ளவில்லை.

நான் நீஸ் பர்தையை நோக்கிச் சென்றேன். அங்கே சென்றுவிட்டால், பின்பு எப்படியாவது பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன்.

மாலை நேரத்தில் அந்த நகரை அடைந்தேன். எனக்குப் பசியாயிருந்தது. முதலில் பிச்சை கேட்க முயன்றேன். ஆனால் கை நீட்டிக் கேட்பதற்கும் பழக்கம் வேண்டுமே? இரண்டுமணி நேரத்துக்குப் பின்னுங்கூட ஒரு சிறு ரொட்டித் துண்டு வாங்குவதற்குப் போதிய காசும் கிடைக்கவில்லை.

பிறகு, மோட்டார் வண்டிகளின் கதவுகளைத் திறந்துவிடும் வேலையிலிறங்கிச் சிறு ஊதியம் பெற்று, அதைக்கொண்டு வறட்டு ரொட்டி வாங்கித் தின்றேன்.

இரவைக் கடற்கரையில் கழித்துவிட்டு, அடுத்த நாள் காலையில் வேலை தேட நிச்சயம் செய்தேன்.

அந்தக் காலத்தில் என்ன பேய்தான் என்னை ஆட்டிவைத்ததோ, நான் அறியேன். ஆங்கிலேயர் உலாவச் செல்லுமிடத்துக்கு அருகில் ஜன நடமாட்டமற்ற ஒரு தெருவில் போய்க்கொண்டிருந்தபோது, கால் நடைப் பாதையில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்றது.

எனக்குள்ளே என்ன நடந்ததோ, தெரியவில்லை. கொஞ்சமேனும் தாமதிக்காமல், என்னை யாராவது பார்க்கிறார்களோ என்றும் கவனிக்காமல், வண்டியின் சேணத்தின் மீதேறி உட்கார்ந்து சவாரி விட்டேன். ஒரு தெருவைத் தாண்டினேன்; பிறகு இன்னுமொரு தெருவையும் தாண்டினேன். வெகு தூரம் சென்று ஓய்ந்துபோன பிறகு நின்றேன்.

நீஸ் நகரில் என்னைப் பிடித்து விடுவார்களோ என்று அஞ்சி, வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டே, சேன் ரபாயல் என்னும் ஊரை நோக்கிச் சென்றேன். வழியில் என் மூளையில் என்னென்னவோ எண்ணங்கள் வேலை செய்யத் தொடங்கின.

சேன் ரபாயலில் நுழைந்து அதையும் தாண்டிச் சென்றேன். பிரெஜுஸ் என்னுமிடத்தில் வழியில் குறுக்கே படுத்திருந்த ஒரு நாய்மீது ஏறாமல் விலகிச்செல்ல முயன்றபோது, என் வண்டி ஒரு

குற்றவாளியா?

மாக்ஸ் ஸ்டுயர் நியூயார்க்கில் ஒரு பிரபல வக்கீல். அநேக பிரசித்தமான வழக்குகளிலெல்லாம் அவர் ஆஜராகி இருக்கிறார்.

ஒரு வழக்கில் எதிரி தரப்பில் தாம் ஆஜரானபோது' ஜூரர்களில் ஒருவரை நோக்கி, "என் கட்சிக்காரனைப் பார்த்தால், உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? குற்றம் செய்திருப்பான் என்றா, நிரபராதியாய்த்தான் இருப்பான் என்றா?" என்று கேட்டார்.

ஜூரர்: குற்றம் செய்திருப்பான் என்றுதான் தோன்றுகிறது.

மாக்ஸ்: ஏன்?

ஜூரர்: இல்லையானால் உம்மை ஏன் அமர்த்திக் கொள்ளுகிறான்?

குட்டிக்கரணம் போட்டு விட்டு அடியோடு நின்றது.

வண்டியில் ஒரு பொட்டு எண்ணெய்கூட இல்லாததனல்தான், அவ்விதமாயிற்று. எப்பொழுது ஒரு முறை திருடியாயிற்ருே. அதற்குப் பின் மேலும் திருட யோசனை யென்ன? நகரத்தில் இங்குமங்கும் அலைந்தபோது, ஒரு மோட்டார் வண்டி லாயத்தின் முன் சில கார்பரேட் வாயு டின்கள் இருந்ததைக் கண்டேன். அங்கே எவரும் காவல் இல்லை; ஒரு டின் எடுத்துக்கொண்டு நாலு கால் பாய்ச்சலாக ஓட்டம் பிடித்தேன்.

நாற்பது கஜதூரம் செல்லுவதற்குள் எனக்குப் பின்னல் ஒரு கும்பல் "திருடன்! திருடன்!" என்று கத்திக்கொண்டே துரத்தி வந்தது; ஒரு துஷ்ட மிருகத்தை வேட்டையாடுவதைப் போல, என்னை அவர்கள் விரட்டினர்கள். களவாடின டப்பாவைக் கீழே போட்டுவிட்டு, இன்னும் அதி வேகமாக ஓடினேன். ஆயினும் பலிக்கவில்லை. என்னைப் பிடித்துக் கீழ போட்டுத் தள்ளி உருட்டி அடித்துப் போலீஸ் சாவடிக்கு இழுத்துக்கொண்டுபோனர்கள். அங்கே ஒரு விசாரணையுமின்றி, ஓர் அறையில் என்னைப் பூட்டி வைத்தார்கள்.

என் வழக்கு நான்கு மாதங்கள் நடந்தது. அந்தக் காலம் முழுவதும் என்னைச் சிறையில் விலங்கிட்டு வைத்திருந்தார்கள். அங்கே 123 நாட்கள் தங்கியிருந்த பிறகு, கோர்ட்டார் மற்ருெரு சிறைச்சாலைக்கு அனுப்பினர்கள். அங்கே ஒன்றரை வருஷங்கள், தங்கியிருக்க நேர்ந்தது.

நான் இருந்த மெத்ரே சிறையில் ஒழுக்கக்கேடு மிகுந்திருந்தது. என் மானத்தைக் காக்கவும் துன்மார்க்கர்களின் ஒழுங்கற்ற யோசனைகளுக்கு உட்படாதிருக்கவும், நான் அடிக்கடி என் புஜபலத்தையும் பிரயோகிக்க வேண்டியதா யிருந்தது!

மெத்ரே சிறையானது, 'குடும்ப வீடுகள்' எனப் பெயர் கொண்ட பல வார்டுகளாக வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வார்டிலும் நாற்பது கைதிகள் வைக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு வார்டுக்கும் கைதிகளில் ஒருவனையே தலைவனுக நியமித்திருந்தார்கள். இந்தத் தலைவன் நல்லவனுக இருந்தால், எல்லாம் சரியாக நடைபெறும். அவன் கடின சித்தமுடையவனுக இருந்தால், அவனுக்குப் பின் பாட்டுப் பாடாமலும் அவனுக்குத் தலை வணங்காமலும் இருப்பவனின் கதி அதோ கதிதான்.

நான் என் தலைவனைப் பதினெட்டு மாதங்கள் எதிர்த்து வந்தேன். ஆனல், நல்ல காலமாக, துத்தநாகப் பட்டரையில் என் வேலையைப் பார்வையிட்ட அதிகாரிகள் என்மீது திருப்தியடைந்து என்னைப்பற்றி நல்ல அபிப்பிராயங்கள் எழுதி யனுப்பினர்கள். நானும் அந்தத் தொழிலையே விரும்பிக் கற்றேன்

பல பருவங்கள் வந்துசென்றன. கோடையில் எங்கள் சிறு வீட்டில் புழுங்கி வெதும்பினேம்; குளிரில் கொடும் பனியால் சில்லிட்டு விறைத்தோம். எங்களுக்குச் சரியான உடுப்பும் கிடையாது. தண்டனைக்குப் பயந்து யாரிடமும் புகார் செய்யத் துணியவில்லை. நாங்கள் இன்னும் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கவும் நேர்ந்தது.

ஒருநாள், மெத்ரே சிறையை மூடிவிடப் போவதாக ஒரு வதந்தி கிளம்பியது. சிலர் அயலூருக்கு அனுப்பப்பட்டார்கள். என்னைத் துரோன்ஷ் என்னும் ஊரிலுள்ள அலெக்கிரே என்னும் குடியானவனிடம் அனுப்பினர். நான் கண்ணீர் விட்டு அழுதேன்.

பதினெட்டு மாதங்களாக எனக்குப் பிடித்த ஒரு தொழிலைக் கற்றுவந்தேன். இப்போது நான் வெறுத்த நிலத்துக்கே, என்னை மீண்டும் அனுப்பினர்கள். எல்லாம் எனது துரதிர்ஷ்டம். ஒருநாள் நான் தப்பியோடினேன்.

நான் அடைந்த ஒரு கிராமத்தில் திரும்பவும் ஒரு சைக்கிளைத் திருடினேன். நடு நடுவே மூன்று இடங்களில் தங்கி, வெட்டவெளியில் படுத்து, கடைசியாகக் கோத்தாளியூர் என்னுமிடத்தை அடைந்தேன். முதலில் திராட்சை அறுவடைக் கூலியாக அமர்ந்து, பின்பு ஒரு வேலையைத் தேடிக்கொள்ளலாமென்றிருந்தேன்.

நான் இரண்டு நாட்கள் பட்டினியிருக்க நேர்ந்தது. ஒரு வீட்டின்

சுற்றுப்பயணம்!

என்னரு நண்பர் கருணு நிதியுடன்
இன்னும் சிலரும் வேலூர்ப் பகுதியில்
சுற்றுப் பயணம் துவங்கினேம்—சுற்றிச்
சொற்சூருவளி தூவினர் தோழர்
சுற்றுப் பயணம் சென்றஊர்க் கெல்லாம்
தூக்கிச் செல்ல அமர்த்தப் பட்டதோர்
பழைய கார்! ஓட்டை! படபட சத்தம்!
பாதையி லெல்லாம் தள்ளியே சென்றேம்!
சிற்சில சமயம் அதிவே கததில்
செல்வது முண்டு! 'பிரேக்' தானில்லை!
வேலூர் விட்டுப் போளூர் செல்ல
வேகமாய்ச் சென்றது எங்கள் கார்! எதிரே
பஸ் ஒன்று வந்தது—பயந்தான் டிரைவர்,
பளிச்செனத் திரும்ப—மயிரிழை தப்பினேம்!
இறங்கினன் எங்கள் டிரைவர், பஸ் டிரைவரை
ஏறிட்டுப் பார்த்தான்! ஆத்திரத் தோடு
'ஏடா! நான் 'பிரேக்' இல்லாமல் வருகிறேன்.
மூடா நீயும் முன்வர லாமோ!'
என்ருன்; உள்ளே இருந்த போலீஸ்,
எங்களைப் பார்த்தான்! எழுதிக் கொண்டான்.
பறந்தது பஸ்: அதைப் பார்த்தபடியே
நகர்ந்தது எங்கள் நாலுகால் டப்பா!

திருடியே வாழ்ந்தான் பேரன்!

கதவைத் தட்டினேன். அதைத் திறந்தவர்கள் என்னைப் பார்த்துவிட்டு, மீண்டும் 'படீர்' என்று கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார்கள். பட்டினியால் சாகாதிருப்பதற்கு மறுபடியும் திருடவேண்டியதுதானு என் கதி?

தூரெத்-ஸ்யுர்-லூ என்னுமிடத்தில் ஜான் பியேர் என்பவர் என்மீது காட்டிய கருணையால் நான் மீண்டும் வழுக்கி விழாமல் காக்கப்பட்டேன். அவர் என்னை ஆதரித்து உணவளித்து எனக்கு வேலையும் கொடுத்தார்.

எட்டு நாட்கள், என் கஷ்டங்கள் யாவும் முடிந்தன வென்று பூரித்திருந்தேன். பிறகு என்னைக் காப்பாற்றிய அந்த நல்ல மனிதர், நான் தொழிலாளி என்று போலீஸ் சாவடியில் சட்டப்படி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னர்.

மறுபடியும் எனக்குச் சனியன் பிடித்தது. என் விதி என்னை விட்டால்தானே? போலீஸாருக்குப் பயந்து, நான் அவ்விடத்தை விட்டு அகன்றேன். நீஸ் நகரில் ஒரு காப்பி ஓட்டலில், மெத்ரேயில் எனக்களிக்கப்பட்ட புதுப் பாதரட்சைகளை ஐம்பது பிராங்குக்கு விற்றேன்.

ஐம்பது பிராங் எனக்குப் பெரிய சம்பத்துப்போலிருந்தது. அதை ஒருபோதும் வற்றாத செல்வமென்று எண்ணி, சக்கையாக உண்டு வயிறு வெடிக்கக் குடித்தேன். கையிலிருந்த காசெல்லாம் கரைந்தது. ஒரு சல்லிகூட இல்லாமல், நீஸ் தெருக்களில் சுற்றியலைந்தேன்.

மனிதன் விழக்கூடிய பாதாளத்தின் கடைசிப் படியையும் அடைந்தேன். திருடினேன் பல நாட்கள் சோமாரியைப் போலத் திரிந்தேன். கடைகளின் வெளியே எறியப்பட்ட அழுகிப்போன காய்கறிகளைத் தின்றேன். கண்ட இடத்திலெல்லாம் படுத்துறங்கினேன். போலீஸாரின் நற்சாட்சிப் பத்திரமின்றி எவரும் எனக்கு வேலை கொடுக்க மறுத்தார்கள். ஒரு சாப்பாட்டு ஓட்டலின் வாயில் கதவைத் தட்டி உண்வு கேட்ட போது. ஓட்டல்காரன் என்னை முரட்டுத்தனமாக வெளியே தள்ளினன். எனக்குப் பசி காதடைத்தது. மீண்டும் திருடினேன். ஆனல், என் பட்டினியைப் போக்கவே அவ்விதம் செய்தேன்.

கடலில் குளிக்கச் சென்றவர்கள் கரையோரத்தில் வைத்திருந்த உடுப்புக்களில் காணப்பட்ட காசைத் திருடி, உணவு வாங்கினேன்.

கான் என்னுமிடத்தில் என்னைப் போலீஸார் கைது செய்

தார்கள். என்னல் முடிந்திருந்தால், தற்கொலை செய்துகொண்டிருப்பேன். என்னைப் போன்றவன் உயிர் வைத்திருப்பதனல், என்ன பயன்? அவன் சமுதாயத்துக்கே பாரமல்லவா?

நான் இன்று சிறையிலிருப்பது என் தவறினலேயே. நான் ஒருவரையும் குறைகூறவில்லை. நான் உதவாக்கரை.

ஆனலும், என்மீது நம்பிக்கை வைப்பீர்களானல், நான் இனி யோக்கியனுக இருப்பேன் என்று கடைசித் தடவையாக உங்களுக்கு உறுதி கூறுகிறேன். நான் மெத்ரே சிறையில் கற்றுக்கொண்ட தொழிலில் மட்டும் என்னை வேலை செய்ய விடுங்கள். எனக்குக் கைகொடுத்து ஆதரிப்பீர்களானல், என் பாட்டி சொன்னதைப் போலவே, நான் நல்லவனுயும் யோக்கியனுயும் ஆகமுடியுமென்று மனப்பூர்வமாக இன்னும் நம்புகிறேன்.

வேலூரில்

எங்கள் 'தென்றல்'

விற்பனையாளர்:

M. G. கேசவன்

வேலூர், (வ.ஆ.)

மாநாட்டு ஸ்டாலில்

'தென்றல்' கிடைக்கும்

5-ம் பக்கத் தொடர்ச்சி]

கைதான கிளைவ் பாதுகாவலி ருந்து தப்பி, கூடலூரிலிருந்த ஸெயின்ட் டேவிட் கோட்டைக் குப் போய்ச் சேர்ந்தான். அங் கிருந்த பட்டாளத்தில் ஒரு வீர னாகச் சேர்ந்து வீரச் செயல்கள் பல செய்து 1749-ல் தளகர்த்த னானான்.

1749-ல் பிரெஞ்சுக்காரருக் கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைப் பிர காரம் ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை திரும்பவும் ஆங்கிலே யர் கைக்கு மாறியது.

பின்பு, கர்னடக யுத்தம், ஆற் காடு முற்றுகை எல்லாம் முடிந்து 1752-ல் கிளைவ் ஸெயின்ட் ஜார்ஜ கோட்டை தளபதியா னான். இடைக்காலத்தில் அவன் காதலியை மறந்துவிடவில்லை. அவனுக்கும் அவளுக்கும் கடிதத் தொடர்பு ஏற்பட்டு நீடித்தது. கடிதம் போய்ச் சேர நான்கி லிருந்து எட்டு மாதங்கள் ஆகும், அது குறித்துக் கவலைப்படாமல் கடிதங்கள் பரிமாறிக்கொண்டி ருந்தனர் இருவரும். தளகர்த்த னானதும் காதலியை வரவழைக் கத் தீர்மானித்தான். காதலி மார்க்ரட்டும் 1753-ல் வந்து சேர்ந்தாள். 1753 பிப்ரவரி 18ல் இருவருக்கும் கல்யாணமா யிற்று.

1754-ல் அட்மிரல் வாட்ஸன் தலைமையில் மன்னர்பிரானின் 39 வது பட்டாளம் வந்து ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முகாம் போட்டது. கோட்டையின் அமைப்பு பலமாக்கப்பட்டது. மேற்குப்புற மதில்கள் உறுதி யாக்கப்பட்டன. "பாரக்ஸ்" "கார்ட்ரூம்" பகுதிகளும் கட்டப் பட்டன.

முற்றுகை

1758ம் ஆண்டில் கோட்டைத் தளகர்த்தராக ஸ்டிரிங்கர் லாரன்ஸ் என்பவர் இருந்தார். அப்பொழுது பிரெஞ்சுக்காரர் கள் கோட்டையை முற்றுகையிட் டார்கள். முற்றுகை 67 தினங்கள் நீடித்தன. 46 நாட்கள் எதிரி களின் ஓயாத குண்டுமாரி கோட் டையைச் சல்லடைக் கண்களா கத் துளைத்தன. மாதாகோயில் ஒன்றுதான் விசேஷமாகப் பழுத டையாத இடம். கடைசியாக பிரிட்டிஷ் கப்பற்படை வந்து, பிரெஞ்சு முற்றுகையைத் தகர்த் தது. இம் முற்றுகையை தீரமா கச் சமாளித்தவர்களில் யூசுப் கான் என்ற சிப்பாய் தலைவர் குறிப்பிடத்தக்கவர்.

இறுதி மாறுதல்கள்

அடுத்து வந்த இருபத்திமூன்று வருடங்களில் மாறுதல்கள் பல நடந்து 1781ல் கோட்டை ஏறக் குறைய இக்காலத்தில் இருப்ப தைப் போன்ற அமைப்பைப் பெற்றுவிட்டது. கோட்டையின் விஸ்தீர்ணம் நூறு ஏகருக்குமேல் பரவியது.

தற்போது மெடிகல் காலேஜ் இருக்கும் இடத்தில் இருந்த ஹாக்ஹில் என்ற குன்றை வெட்டி, கோட்டையை ஒட்டி ஓடிய ஆற்றைத் தூர்த்து, தூரமாக ஓடும்படி திருப்பிவிட்டார்கள்.

1798-ல் ஆர்தர் வெல்லஸ்லி (பின்பு வெலிங்டன் பிரபு ஆன வர்) 33-வது பட்டாளத்துடன் வந்து கோட்டையில் குடியேறி னார்.

1781-ம் வருஷ மாறுதல்களுக் குப் பின்பு கோட்டையில் விசேஷ மான மாறுபாடுகள் இல்லை. 1805-ம் ஆண்டிலிருந்து கோட் டையில் அமைதியான வாழ்வு ஆரம்பமாகியது. மவுண்ட்ரோடு, எழும்பூர், நுங்கம்பாக்கம் பகுதி களில் வீடுகள் எழுந்து நகரம் பெரிதாயிற்று. அடுத்து வந்த ஐம்பது வருஷங்களில் ரோடுகள் எல்லாம் அமைக்கப்பட்டன. 1875-ல் துறைமுகத்தில் ஏற்ப டுத்தப்பட்ட சில மாறுதல்கள் காரணமாக கடல் வெகுதூரம் தள்ளிப்போய் விட்டது.

கொடி பறக்கும் ஸ்தலத்தில் அடைபட்டுக் காட்சி தரும் கேட்டு கள் 1942-ம் வருஷம் ஜப்பானி யர் படையெடுப்பு நிகழுமோ என்ற பயத்தால் மூடப்பட்டவை.

*

கொங்குநாட்டுக் கோட்டையினுள்ளே
எங்கள் பாட்டு எங்கும் கேட்கும்!

இசையுடன் இயற்கைப் பேச்சும
இயலுடன் நடித்துக்காட்டும்
நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி
உணர்ச்சியால் உயர்ந்த தம் நடிப்பினுலே
உள்ளங்கள் கவர்ந்துவிட்ட
உயர்கலைஞர் சிவாஜி கணேசன்
சேர்ந்து நடிக்கும்
இணையற்ற திரைப்படக் காவியம்!

நரசுவின்
துளிவிஷம்
டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி

மற்றும் — அழகி, விளையாட்டுப்பொம்மை

பூத்துக் குலுங்கும் பொன்மலர்க்
காடு; பார்த்தால் பசிதீரும்!

காதல்! காதல்! காதல்!
காதல் போயிற், காதல் போயிற்
சாதல்! சாதல்! சாதல்!

பாடும் குயில்! ஆடும் மயில்!
பரவசம் தரும்

கேரளத்து முத்தாரம்!
தீந்தமிழின் கலைக்கூடம்

"அகமும் புறமும் அழுக்கில்லா
மல் ஆணும் பெண்ணும் ஒன்ருய்
உலகை சுத்தம் செய்யணும்"

மணமேடை பலிபீடமா?—சூடும்
மலர்மாலை விஷ நாகமா?

சின்னச்சின்ன வீடுகட்டி சிங்கார
வீடுகட்டி பொண்ணு மாப்பிள்ளை
வச்சு ஆடுவோம்!

அன்பும் அறனும் உடைத்தாயின்
— இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது!

"தள்ளாத காலத்தில்
கல்யாணமா? தாத்தா உனக்கிது
சரியாகுமா?"

"நப்பா! நீ ரொம்ப
அட்வான்ஸ்லெ போய்ட்டெடா!
அம்பிகாபதி தம்பிடா நீ!"

சின்னப்பா—கண்ணம்பா
நடித்த
மங்கையர்க்கரசி

மகாலிங்கம் — ராஜம்மா
நடித்த
லைலாமஜ்னு

மகாலிங்கம்—வரலட்சுமி
நடித்த
மச்சரேகை

லலிதா — பத்மினி
கலைவாணர் — மதுரம் நடித்த
மணமகள்

லலிதா — பத்மினி
நடித்த
சிங்காரி

பத்மினி — கணேசன்
கலைவாணர் — மதுரம் நடித்த
பணம்

லலிதா — பத்மினி
நடித்த
மருமகள்

பத்மினி — கணேசன்
ராஜகுமாரி நடித்த
அன்பு

சரஸ்வதி — மனேகர்
நடித்த
ராஜாம்பாள்

பத்மினி — கணேசன்
ராமச்சந்திரன் நடித்த
கல்யாணம் பண்ணி
— யும் பிரம்மச்சாரி

கோயம்புத்தூர் பிக்சர்ஸ் லிட்.
ஜெயில் ரோட்... கோயம்புத்தூர்...

இலக்கியத்தில் காதல்

—காரை–முத்துப் புலவர்—

நயமான காதலன் பாரதி என்றேன். அதுமட்டுமல்ல; அனுபவபூர்வமான கருத்தையே காதலில் பிரதிபலிக்கிருன், அவன்! எங்கெங்கே எது சுவை, எது சுகம் என்று தேடி எடுத்து அனுபவிக்கிருன். கருப்போ சிவப்போ, மனைவி என்கிற ஸ்தானத்துக்கு சுகத்துக்கு ஒரு பெண் தேவை; குடிசையோ, மாளிகையோ, வசிப்பதற்கு, துயில்வதற்கு ஒரு இடம் தேவை; கூழோ, பழரசமோ, உண்பதற்கு உணவு தேவை; கந்தலோ கழிசலோ கட்டுவதற்கு ஆடை தேவை, என்கிற சராசரித் தத்துவம் அவனுக்குப் பிடிக்கவில்லை. அழகான பெண்ணிடம் தான் பரிபூரண சுகம் கிடைக்கிறது. அப்படியா! அந்த அழகான பெண் எங்கே இருக்கிருள்? உலகமெல்லாம் சுற்றி வருகிருன் பாரதி! சுவையான உணவு தான் வேண்டும்; அது எங்கிருந்து கிடைத்தாலும் சரி; பளபளக்கும் உடை தேவை! இப்படிப் பொறுக்கி எடுத்து அனுபவிக்கிருன்!

பாருங்களேன்; அழகான நிலவு காய்கிறது, அந்த நேரத்தில் எந்த நதியில் படகு செலுத்தினல் சுகமாக இருக்கும்? கங்கையா, காவிரியா, இல்லை தண்ணீருக்குத் தவியாய்த் தவிக்கும் வைகையா?—சீச்சீ! இதெல்லாம் என்னதான் அழகாயிருந்தாலும் நிலாக்காலத்தில், இரவில் படகில் உலவுவதற்கு அவ்வளவு சுகமில்லை.

இரண்டு கரையிலும் நாணல்கள் சிலிர்த்து நிற்க, அவற்றின் நிழல் ஆற்றின் உட்புறத்தில் புதியதோர் நாணல் காட்டினை உண்டாக்கிக் காட்ட, வெள்ளியின் பளபளப்புப் போல், தண்ணீரில் நிலா வொளி தோன்ற, வெள்ளிப் பட்டயத்துக்குக் கருங்காலி மரத்தால் 'பிரேம்' போட்ட மாதிரி இருக்கும் நதி எது—தேடினன்...தேடினன்...... கண்டு பிடித்தான்!

ஆம்; சிந்து நதியேதான்!

சரி; நதியில் படகு வந்து விட்டது.

இனி பக்கத்தில் அமர்ந்து வருவதற்கு ஒரு இளம் பெண் தேவை. அவளை எந்த நாட்டில் காணலாம்? ஆந்திராவா, கன்னடமா? தமிழா, இந்தியா? வங்காளியா, குஜராத்தியா?—இவர்களிடம் அழகிருந்தாலும்—இதைக் காட்டிலும் அழகு தேடினன் பாரதி!....தேடினன்....தேடினன்....கண்டுபிடித்தான்!

ஆம்; மலையாளத்து மங்கையே தான்!

சரி; தந்தச் சிலைபோல் மங்கை வந்துவிட்டாள்.

இனி பாடுவதற்கு பாடல் வேண்டும்; அதற்கு தெலுங்கைத் தேர்ந்தெடுத்தான் உரிமையோடு! தெலுங்கு, பாடுக்குச் சுவையான மொழி என்பதை 'திராவிட' மக்கள் மறுக்க மாட்டார்கள்.

இதைத்தான் பாரதி சொன்னன்:

சிந்து நதியின் மிசை
நிலவினிலே
சேர நன்னாட்டிளம்
பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில்
பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டி
விளையாடி வருவோம்!!

ஆகா! ஆகா! என்ன சுகம்! என்ன சுகம்!

* * *

எப்பொழுது பேசுவது காதல்? எப்படிப் பேசுவது காதல்?

படங்களிலே பார்க்கிறோம்; காதலனும் காதலியும் ஆற்றங்கரை ஓரத்திலே உட்கார்ந்து ஊரிலுள்ள மயில், குயில், வானம் பாடி, புரு, மான். சக்ரவாகப் பட்சி எல்லாவற்றையும் அநுவசியமாக இழுத்துப் போட்டு வம்பு பண்ணி, தங்களை மறந்து விடுவார்கள். "கண்ணே! உன் முகம் நிலவு! உன் மொழி குயில் உன் விழி மீன்! கன்னங்கள் ரோஜா! பற்கள் முல்லை! கைகள் செங்காந்தள்! ஆகா! என் வண்ணமலரே!" என்றெல்லாம் உளறிக் கொட்டுவார்கள். பார்ப்பவர்களில் புதுசுகளாயிருக்கிற வாலிபர்கள், சரிதான் என்று இதையே காதல் முறைப் பேச்சாகத் தீர்மானித்துக் கொள்வார்கள்! வீட்டிற்குப் போய், "கண்ணே!" என்று சொன்னதும், மனைவி, "சும்மா இருங்க! கண்ணும் மூக்கும்!" என்று கோணிக் கொள்வாள்! சில மனைவியர், கணவனுக்குப் பைத்தியம் என்று தீர்மானிப்பதும் உண்டு!!

இதெல்லாமா காதல்? இல்லை என்று சொல்லாமல் சொல்கிருன், பாரதி. உண்மைக் காதல் எது என்ருல், மனைவி படித்தவளாயிருந்தாலும், பட்டிக்காடாயிருந்தாலும், பேசத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் தன்னை மறந்து அந்தக் காதல் பேச்சிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்! அது எப்போதோ, அப்பொழுது பேசுவதுதான் காதல் என்கிருன், பாரதி! அது எப்பொழுது?

தோட்டத்தில் அல்ல; பீச்சில் அல்ல; பகல் நேரத்திலும் அல்ல!

பின் எப்பொழுது?

"கலவி நடுப் பாதியிலே
காதல் பேசி"

என்கிருன்!

ஒரே வரி! உலகமே அடக்கம்!

கணவனும் மனைவியும், இரவிலே, மஞ்சத்தில் "மாரவேள் கணை"க்கு எதிர்ப்புப் பாட்டுப் பாடும் போது — மனைவி கட்டு மீறிய உணர்ச்சியில் கணவன் உதடுகளைக் காயப்படுத்துகின்ற அப்போது தன்னை மறந்து "ராஜா! என் கண்ணு!" அப்படி இப்படி என்று உளறிக் கொட்டுகிற அப்போது.... துன்ப நினைவுகள் ஓடி ஒளிந்து......உலகத்து இன்பம் யாவும் ஓடி வந்து சரணடைகின்ற அப்போது......இருவரும் எதைச் சொல்வதென்று புரியாமல் புதுப் புது வார்த்தைகளை உற்பத்தி செய்கிருர்களே அப்போது... ஆமாம் 'அந்த' நேரத்தில் வெளிவரும் வார்த்தைகளைத்தான் காதல் பேச்சு என்கிருன், பாரதி!

"கலவி நடுப்பாதியிலே
காதல் பேசி"

ஆகா! என்ன அனுபவம்! என்ன அனுபவம்! எல்லோருக்கும் தான் இருக்கிறது இந்த அனுபவம்; யார் சொன்னுர்கள்; பாரதியைத் தவிர!

* * *

ஒன்று; இன்னெருவனும் இதே கருத்தைப் பிரதிபலித்திருக்கிருன், முன்பு. இவ்வளவு நேரடியாக அதையே, "காதல் பேச்சு" என்று தீர்ப்பாக்கத் துணியாமல் வேறு விதமாகச் சொல்லியிருக்கிருன்.

'கலிங்கத்துப் பரணி' பாடி செயங் கொண்டான், கடை திறப்புப் பகுதியில் கூறுகிருன்.

கணவனும் மனைவியும் படுக்கையறையில் இருக்கிருர்கள். உறவு நேரத்தில் உளறிக்கொட்டுகிருர்கள். அதே படுக்கையறையில் ஒரு கிளியை வைத்து விட்டுத் தூங்கி விட்டார்கள். அந்தக் கிளி, இவர்கள் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தது. காலையில் அவர்களைப் பார்த்து, இரவில் அவர்களென்ன பேசினுர்களோ அவையனைத்தையும் "கண்ணே! மூக்கே!" என்று ஆரம்பித்து விட்டது! மனைவிக்கு வெட்கம் தாங்கவில்லை! இரவில் அவள் பேசிய பேச்சுத்தான்; ஆனுல் காலையில் கேட்கும்போது வெட்கமாக இருக்கிறது! ஓடிப்போய்க் கிளியின் வாயைப் பொத்துகிருள்.

"நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக்
கிளியுரைப்ப
வாயைப் பொத்தும்
மட நல்லீர்!....

* * *

சிறந்த புதிய வெளியீடுகள்!

★

நினைவுச்சின்னம்	இளமைப்பித்தன்	... ரூ. 1– 0–0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	... ரூ. 1– 0–0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	.... ரூ. 1– 0–0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	.... ரூ. 0– 8–0
கம்பன் கெடுத்த காவியம்		... ரூ. 0– 4–0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணுமலை	... ரூ. 0– 8–0
வீடும் விளக்கும்	'சுகி'	... ரூ. 0– 8–0
தாஜ்மஹால்	நா. பாண்டுரங்கன்	.... ரூ. 0– 8–0
கொடிமுல்லை	வாணிதாசன்	.... ரூ. 0–12–0
இரு கதைகள்	நாரா நாச்சியப்பன்	.... ரூ. 0 –4–0

வணிகர்கட்குத் தக்க கழிவு உண்டு.

★

பொன்னி

(மாதமிருமுறை)

	உள் நாடு	வெளி நாடு
ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0	ரூ. 7—8—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது, சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0—5—0 தபால் தலை அனுப்பவேண்டும்.

★

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு : : சென்னை – 1.

[illegible]ரு தேடும் "பாரதபுத்ரா!" ... ...

[[illegible]ருப்பதி வெங்கடாசலபதிக்கு தங்கத்தால் கை; ஒடிந்துபோன [illegible]ாகனக்காலுக்கு வெள்ளிப் பட்டையால் கால்; விராட பர்வ [illegible]ச்சி—இவை 'பாரத புத்ரர்' பண்பாடு. ஆனால் உலகம் முழு[illegible]மையும் எப்படிப்பட்ட வீரர்கள் இருந்துள்ளனர்! புதிய நாடு கண்டு [illegible]டிப்பதிலே அவர்களுக்குதான் எவ்வளவு அக்கரை! இந்தக் கட்டு[illegible]ரைக்கு ஆதாரம், 'ஜான் புல்லர்' எழுதிய நூல்.]

[illegible]டு தேடி ஆராயும் வேலையில், பிரிட்டிஷாரை மற்றவர்கள் [illegible]ந்திக் கொண்டார்களென்று [illegible]சால்லவேண்டும். கிறிஸ்[illegible] [illegible]ம் வரு[illegible]றப்பதற்கு[illegible]க்கு முன்பே, பாபிலோனியர்கள் வானளாவியிருந்த தங்களது நகர்ச் சுவர்களின் மீது ஏறி, தங்கள் உலகத்துக்கப்பால் என்னதான் இருக்கிறது என்று ஆவலோடு பார்க்கலானார்கள்,

இந்த வேலைக்காக, பிரிட்டிஷ்காரன் தன் தீவை விட்டுப் புறப்படுவதற்கு வெகுகாலத்துக்கு முன்பே, மத்திய தரைக்கடல் பிரதேசத்தை மற்றவர்கள் தேடிக்கண்டுபிடித்து, ஆராய்ந்து படங்கள் கூட எழுதி வைத்து விட்டார்கள். ஆனால், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பிரிட்டிஷார் இந்த வேலையில் ஈடுபடத் தலைப்பட்ட பின், அவர்களைப்போல் அவ்வளவு அதிகமாய், தீவிரமாய் உலகத்திலே வேறு எந்த மக்களுமே அந்த வேலையைச் செய்யவில்லை.

ஷேக்ஸ்பியர் பிறப்பதற்கு 300 வருஷத்துக்கு முன்புதான் பிரிட்டிஷார் இவ் வேலையில் இறங்கினார்கள். இந்த விஷயத்தில், சைனாக்காரர்கள் கண்டு பிடித்த ஒரு விசித்திரமான கருவி அவர்களுக்கு உதவியாயிருந்தது. 'நாவாய்க் கல்' அல்லது 'பிடிவாதக் கல்' என்னும் கல்லைப் பற்றி ஆங்கில ராணியின் வைத்தியரான டாக்டர் கில்பர்ட், தமது தினசரிக் குறிப்பிலே எழுதி வைத்திருக்கிறார். இந்தக் காந்தக் கல்லைத் தொங்கவிட்டு வைத்தால், அது எப்போதும் வடக்குத் திசையை நோக்கியே நிற்கும். இதைச் சைனாக்காரர்கள் பல நூற்றாண்டுகளாக அறிந்திருந்தார்கள். மேற் கண்ட காலத்தில்தான், இதை ஆங்கிலேயர்கள் அறிய வந்தார்கள். 'க்ரூஸேட்' என்னும் புனித யுத்தத்தை நடத்துவதற்காக, ஆங்கிலேய வீரர்கள் ஏறிச் சென்ற கப்பல்களை நடத்துவதற்கு இந்தக் கருவியே உதவியாயிருந்தது. அதன் பிறகு, முந்நூறு வருஷங் கழித்து, துணிவு மிகுந்த ஆங்கிலேயர் கோஷ்டி ஒன்று இந்தச் சீனக் கல்லை வைத்துக்கொண்டு, சீனாவையே கண்டு பிடிக்கப் புறப்பட்டு விட்டது!

அந்தக் காலத்தில் மனிதன் தன்னைப் பற்றிப் பிரமாதமாக நினைத்துக் கொண்டிருந்தான். உலகமே அப்போது இளமையாயிருந்தது. மனிதன் சாதிக்கக் கூடிய காரியங்களுக்கு ஒரு எல்லையே இல்லையென்று ஜனங்களுக்குத் தோன்றிற்று. 'வீரனுக்குத்தான் வெற்றி; தைரியசாலிக்குத் தரணியே சொந்தம்' என்று பிரிட்டிஷார் எண்ணினார்கள்.

ஐரோப்பாவின் மேலக் கரையிலே, பனி மூடி இருக்குமிடம் [illegible]யாமல் அமைதியாய்க் [illegible]ந்த அந்த ஆங்கிலத் தீவிலே, திடீரென்று ஒரு உத்வேகம் பிறந்தது. இங்கிலாந்தின் கடற்கரையிலுள்ள ஒவ்வொரு துறைமுகத்திலும், கதைகள் கிளைத்தன. "கடலைக் கடந்து செல்லத் தைரியம் மட்டுமிருந்தால், காணற்கரிய காட்சிகளைக் காணலாம்; பெறற்கரிய பேறெல்லாம் பெறலாம்" என்று ஜனங்கள் பேசலானார்கள். வாரா வாரம் சில கப்பல்கள் துறைமுகங்களுக்குள்ளே வந்து நிற்கும். அந்தச் சிறு கப்பல்களில் இருந்த மாலுமிகளில் பெரும்பாலும் பாதிப்பேர் மாண்டு மறைந்திருப்பார்கள்; பாய் மரங்கள் நைந்து கிழிந்து கிடக்கும்; மேல் தளமெல்லாம் உப்புப்பூத்துக் கிடக்கும் கரையோரத்தில் ஏதோ சிறிது தூரம் போய் வந்துகொண்டிருந்த இந்தக் கப்பல்கள், இப்போது ஓய்ந்து தளர்ந்து வந்து சேர்ந்து, இதற்கு முன் இங்கிலாந்து கண்டறியாத பட்டாடைகளையும் பொன்னையும் வாசனைத் திரவியங்களையும் ரேவுகளில் இறக்கலாயின.

எலிஜபெத் மகாராணியின் காலத்திலே இப்படிக் கடல்மேல் சென்ற வீரர்களுக்குள்ளே மிகவும் பிரசித்தி பெற்றவர் ஸர் பிரான்ஸிஸ் ட்ரேக் என்பவர்தான். ட்ரேக் தமது இருபத்தியிரண்டாவது வயதிலே 'ஜூடித்' என்னும் சிறு கப்பலொன்றுக்குத் தலைவராகி விட்டார். வயதில் இளைஞராயிருந்தாலும், மெக்ஸிகோ வளைகுடாவில் நடந்த போரில் ஸர் ஜான் ஹாக்கின்ஸ் என்னும் தம் உறவினருக்குத் துணையாய் நின்று வீராவேசத்தோடு ட்ரேக் போர் புரிந்தார்.

உயிருக்குத் துணிந்து உற்சாகத்தோடு மனம் போனவாறு சென்றால், ஏதோ ஒரு நாடு எங்கேயாவது ஒருவேளை தென்படலாம் என்றுதான், அந்தக் காலத்தில் சாதாரண மாலுமிகள் நினைத்தனர். ஆனால், டிரேக் அப்படி எண்ணவில்லை. பனமா ஜலசந்தியில் உயர்ந்தோங்கி நின்ற ஒரு மரத்தின் உச்சாணிக் கிளையில் ஏறி, பசிபிக் கடல் முழுவதையும் கண்ணுக் கெட்டிய மட்டும் அவர் கண்ணோட்டம் விட்டிருக்கிறார். ஆகவே, இந்தப் புதுக்கடலில் பிரயாணம் செய்து பார்க்கவேண்டுமென்னும் உறுதியோடேயே அவர் இங்கிலாந்துக்குக் திரும்பினார். ஏற்கனவே, எலிஜபெத் மகாராணியின் தயவை இவர் பெற்றிருந்தார், தாம்நாடுதேடிப்பிரயாணம் செய்தால், அதனால் இங்கிலாந்துக்கு அளவற்ற புகழ் ஏற்படும் என்று ராணியிடம் சொல்லி, எளிதிலே அவளது சம்மதத்தை ட்ரேக் பெற்று விட்டார்.

உடனே ஐந்து மரக்கலங்கள் தயாராயின. எல்லாம் சிறு சிறு கப்பல்கள்தான் ஆபத்தில், உதவுவதற்காக இன்று பெரிய கப்பல்களிலே, சில படகுகள் கொண்டு செல்லப்படுகின்றன அல்லவா; அந்தப் படகுகளைவிட, ட்ரேக் கோஷ்டியின் மரக்கலங்கள் எந்த விதத்திலும் பெரியவையல்ல. ஆனால், அந்தச் சிறு கப்பல்களிலேதான் 1577-ம் ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 13ௗ யன்று தாமுள்பட 66 பேர் அடங்கிய ஒரு கோஷ்டியை அழைத்துக் கொண்டு டிரேக் புறப்பட்டார். வெர்டி முனை வழியாகச் செல்வதென்று ஒரு மார்க்கமும் அவர் வகுத்துக் கொண்டார்.

குளிருக்குப் பேர்போன அட்லாண்டிக் கடலிலே நான்குமாத காலம் பிரயாணம் செய்த பின்னர், இந்த ஐந்து சிறு கப்பல்களும் ப்ரெஸீலிலுள்ள ரியோ டிலா ப்ளேட்டா என்னுமிடத்துக்குப் போய்ச் சேர்ந்தன. நடுவழியிலே, ஐந்தில் நாலு கப்பல் நாசமாகி விட்டன. அக்டோபர் மாசத்தில், டிரேக்கின் கப்பலொன்றுதான் மிஞ்சி நின்றது. அவர் எங்கெங்கேயோ சுற்றி [illegible] 10 மாதத்துக்குப் பிறகு, முதலிலே தாங்கள் புறப்பட்ட இடமாகிய ப்ளிமத் ஜலசந்திக்கு வந்து சேர்ந்தார். எலிஜபெத் மகாராணி அவருக்கு 'நைட்' பட்டம் அளித்தாள்; அவருடைய கப்பலை ஒரு ஞாபகச் சின்னமாகக் காப்பாற்றி வைக்கும்படியும் செய்தாள்,

அப்போது பிரிட்டனில் பிறந்த இந்த நாடு தேடும் ஆர்வம், அதன் பிறகு மடியவேயில்லை. பின்னால் பலபேர் இப்படி நாடு தேடி அலைந்திருக்கிறார்கள். இவர்களிலே மிகவும் பிரசித்தி

... ... நாடுதேடிய வீரரைப்பாராய்!

பெற்றவரான ஜேம்ஸ் குக், மூன்று தடவை நெடுந்தூரம் பிரயாணம் செய்து, உலக முழுவதையும் சுற்றிவந்து, பசிபிக் கடல் பூராவையும் பூரணமாய் ஆராய்ந்தார். ஆஸ்திரேலியாவிலும், நியூஜீலந்திலும், அவர்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு விதை யூன்றினார்.

ஆனால், நாடு தேடிய பிரிட்டிஷ் வீரர்களுக்குள்ளேயே டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டனைத்தான், தலை சிறந்தவராகச் சொல்ல வேண்டும். 1850-1870 இவ்விரு வருஷங்களுக்கும் இடையில் அவர் கண்டுபிடித்த பிரதேசங்கள் எவ்வளவோ முக்கியமானவையாகும். அவர் சென்ற விடமெல்லாம் பற்பல விதமான மக்களைக் கண்டார். அவர்களோடு கலந்து வாழ்ந்தார். அவர்களது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டார். மத்திய ஆப்பிரிக்காவிலே அவருடன் தொடர்பு பெற்ற மக்களின் சந்ததியார். இன்னமும் அவருடைய பெயரைப் போற்றுகிறார்கள்.

இந்த வழியில் ஆப்பிரிக்காவில் பிரசித்தியடைந்த மற்றொரு வீரர் மங்கோ பார்க் என்பவர். அவர் நாகரிகமே தலைக்காட்டாத பிரதேசங்களிலெல்லாம் சென்று ஆராய்ந்தார். புறப்படும்போது சாதாரண உடையுடனேயே புறப்பட்டார். திரும்பி வந்தபோதோ, இலையும் தழையும் உடுத்திக் கொண்டு வந்து சேர்ந்தார்!

துருவ ஆராய்ச்சியிலே இணையற்ற புகழ் பெற்றவர் காப்டன் ஸ்காட் என்பவர்தான். 1911-ஆம் வருஷம் மார்ச் மாதம் 29ௗ சிறு குடிசையொன்றில் தமது இரண்டு சகாக்களுடன், அவர் இறந்தார். தென் துருவத்திலிருந்து திரும்பித் தமது முகாமுக்குப் பதினொரு மைல் தூரத்தில் வந்து விட்டார். அங்கேதான் சாவு வந்து அவரைப் எட்டிப் பிடித்தது.

● வசந்தத்திலே மிதந்துவரும் தமிழ்நடை!
● மலை அருவிபோல் வளரும் கதைப்போக்கு!
● பொருள் பொதிந்த கருத்துக்கள்!

எழுத்துராணி

கவிஞர் **கண்ணதாசன்** தீட்டியது

விலை ரூ, 1—0—0

விவரங்களுக்கு :—

அருணோதயம்

புத்தகம் வெளியிடுவோர் சென்னை-14.

...ங்கள்! நம்புங்கள்!!

...ர் அங்கத்தினர் ...ந் தலைவர், ஒரு ...சயலாளர்; அவர் ...ருடைய குடும்பங்கள் அதற்கு ஆதரவாளர்கள்"— இப்படி ஒரு கட்சி இருக்கிறது தமிழ் நாட்டில். அதற்கு ஒரு கொடியும் இருக்கிறது! ஆச்சரியம்! ஆச்சரியம்! பேராச்சரியம்!—அந்தக் கட்சியின் பெயர் தமிழரசுக் கழகம்! கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இந்தக் கட்சியின் விலாசம் தேவையானுல் பத்திரிகைகளில் விளம்பரம் போடுங்கள்! ஆள் வைத்து ஊர் ஊராகத் தேடுங்கள்! விலாசம் கிடைத்தால் எனக்கு எழுதுங்கள். ம. பொ. சிவஞானம் என்று ஒரு மனிதர்—ஆம்; மனிதர் என்றுதான் கேள்விப்படுகிறேன்—அதன் தலைவராம். இவருக்குத் தமிழிலே அ. ஆ, இ, ஈ தெரியும் என்று சிலரிடமிருந்து நிச்சயமாகத் தெரியவருகிறது. ஆங்கிலம் என்ருெரு மொழி இருப்பதைப் பற்றியும் அவர் விசாரித்து வைத்திருப்பதாக ஊரிலே சில 'சின்னதுகள்' பெர்மிட் வாங்கிக் கொடுத்ததற்கு 'கமிஷன்' வாங்கப் போன இடத்திலே சொன்னதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் அறிவிக்கின்றன. இந்தத் தலைவர் வாங்கியிருப்பதாகக் கூறப்படும் அச்சகம், நிச்சயமாக அவர் 'லஞ்சம்' வாங்கிய பணத்திலிருந்து வாங்கப் பட்டதல்ல என்று நான் உறுதியாகக் கூறமுடியும். காரணம், லஞ்சம் 'கொடுக்காதவர்' என்னிடம் 'சொல்லவில்லை!'

* * *

இதுகள், சமீபத்தில் கடற்கரையில் ஒரு கூட்டம் போட்டதுகளாம். கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கியதற்காக காமராஜரை வெளுத்து மடித்து சலவை பண்ணி, தங்கள் முதுகுகளின் மேல் ஏற்றிக்கொண்டு நடந்ததுகளாம்! கூட்டம் ஏகப் பிரமாதமாம். ஆறு பேர் வந்திருந்தார்களாம். மிகப் பெரிய கூட்டமாம்—கடற்கரை மணலையெல்லாம் சேர்த்து! அதிலே—சி. பி. சி. சொன்னமாதிரி கொட்டகை போட்டவன், மைக் கொடுத்தவன் முதல் எல்லோரும் அடங்குகிருர்கள் என்று, 'வதந்தி' நிருபர் கூறுகிருர்.

* * *

இவர்களின் தலைவராகச் சொல்லிக் கொள்ளும் ம. பொ. சி. என்பவர் 'போராட்டம்' ஒன்று 'எல்லை' விஷயமாக நடத்தப் போவதாகச் சொன்னுராம். காமராசர் அதைப்பற்றி அறிக்கை விட்டாராம். இதிலேதான் நமது நிருபருக்குக் கொஞ்சம் வருத்தம். "குதிரைகள் குதிரைகளைப் பற்றிக் கவலைப்படலாமே தவிர, குதிரை மாதிரி இருப்பவற்றைப் பற்றிக் கவலைப்படக் கூடாது" என்று நமது நிருபர் வருத்தத்துடன் முடிக்கிருர்.

—புயலோன்

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/888

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

M/ors: SEENU & CO., Post Box, 1638, (   ) MADRAS-1.

பிராஞ்ச் 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

வந்தவரைப் பற்றி ... ...

... ... சில வார்த்தைகள்!

வந்து விட்டார்; வந்து விட்டார்—அவர் வந்து விட்டார்! அன்பழைப்பை ஏற்றுவந்து விட்டார்! அரசியல் அனலைத் தணிக்கக் கூடிய வழி முறைகளைப்பற்றி ஆராய வந்து விட்டார்!

அவர் வந்தது விருந்து மண்டபத்தைப் பார்வையிட்டுச் செல்ல அல்ல; கேளிக்கைக் கூடங்களில் கும்மாள மடித்துச் செல்ல அல்ல — அமைதியற்றிருக்கும் இந்தோ — சீனுவைப்பற்றி, கொந்தளிக்கும் கொரியா பிரச்சனையைப்பற்றி, இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இருக்க வேண்டிய உறவு முறைகளைப் பற்றி—நேரு பண்டிதரோடு கூடி கலந்து பேச வந்திருக்கிருர்! அவர்தான் நவசீனுவின் பிரதமரும் அயல் நாட்டு அமைச்சருமான தோழர் சூ-என்-லாய்!

பட்டை தீட்டாத வைரக்கல், குடத்திலிட்ட மணிவிளக்கு, புடமெடுக்காத தங்கம் — என்றெல்லாம் கூறப்படுகின்றனவே, அவைகளுக்கு எடுத்துக் காட்டு போல் இருந்தார் சூ-என்-லாய், இதே ஆண்டு ஜனவரி மாதம் 25-ந்தேதி வரை!

ஆறுமாதங்களுக்கு முன் நடந்த பெர்லின் மாநாட்டிலே அமெரிக்காவின் அயல் நாட்டு அமைச்சர் ஜான் பாஸ்டர் டல்லஸ் கேட்டார்: "யார் இந்த சூ-என்-லாய்?" ஆமாம் சீனுவை இன்ப உருவமாகச் செதுக்கிய சிற்பிகளுள் ஒருவரான சூ-என்-லாய் பற்றித்தான் டல்லஸ் துரை கேட்டார் இப்படி! பாவம்! டல்லஸ் துரை மகனுருக்குத் துப்பறியும் கதைகள் படிப்பதில் தான் அதிகப் பிரியம்! அதனுல்தான் சீனுவின் புரட்சியுருவகத்தை அவரால் அறிய முடியாமற்போய் விட்டது போலும்!

இன்று உலக மக்களின் கண்களுக்கு மாபெரும் அரசியல் வாதியாகக் காணப்படும் சூ, ஓர் புரட்சிப் பேழை! சியாங்கே,—ஷேக்கின் கொடுமை பொருந்திய ஆட்சியிலே அவர் தலைக்கு நாலாயிரம் பவுன்களுக்குமேல் விலை கூறப்பட்டது என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்! அவர் ஒரு இலட்சிய வீரர்! கோமிண்டாங் ஆட்சி காலத்திலே அவர் நிழலைக் கண்டாலே ஆட்சியாளருக்குக் கதி கலங்கும் என்ருல் எண்ணிப் பாருங்கள்!

சூ-என்-லாயை அவர் தோழர்களெல்லாம் ஜோ - என் - லீ என்று அழைப்பார்களாம்! இதற்குக் காரணம் 'ஜோ' என்ற எழுத்தின் அழுத்தமான உச்சரிப்பைப் போலவே, அவரும் அழுத்தக்காரராம், முரட்டுதனமுடையவராம். குரூரத்தன்மை படைத்தவராம்!

சூவைப்பற்றி பலர் பலவிதமான அபிப்பிராயங்களைக் கூறுகிருர்கள். அந்த அபிப்பிராயங்களிலே தூற்றலும் உண்டு, போற்றலும் உண்டு!

"அவன் என் தோழன் என்பதையே மறந்து விட்டேன்! அவனை நேரிலே இன்று கண்டால் கட்டாயம் கொல்லாமல் இருக்க மாட்டேன்!"

"சூ ஒரு கொலைகாரான்! தன் சொந்தக் கரங்களாலேயே பச்சாதாபம் சிறிதும் இன்றி மக்களைக் கொன்றிருக்கிருன்!"

"அவர் நியாயமானவர்; நேர்மையானவர்! அரசியல் நெறி தவருத ஓர் கம்யூனிஸ்ட்!"

"சிறந்த அரசியல்வாதி சூ! அவர் இல்லையென்ருல் மக்கள் சீனு என்பதே சரித்திரத்தில் இல்லை!"

'யார் எந்த விதமான கருத்தைத் தெரிவித்தாலும், சூ என்னமோ இன்று உலக மக்கள் கண்ணுேட்டத்திலே, அரசியல் மேதைகள் வரிசையிலே, சுதந்திர வீரர்கள் பட்டியலிலே, சமாதானப் பிரியர்கள் கூட்டுறவிலே சேர்க்கப்படவேண்டியவர்' என்றுதான் இன்றுவரை பல நாட்டு மக்களும் கருதுகின்றனர்.

1919-ம் ஆண்டு கோமிண்டாங் சீனு வார்சேல் உடன்படிக்கையைச் செய்து கொண்டதை எதிர்த்து போராடிய போது சர்க்கார் அவரை கைது செய்தது, சிறையில் தள்ளியது! சிறையிலிருந்து வெளி வந்தபோது அவரோடு ஓர் சிங்காரியும் கூட வந்தாள் கை கோர்த்துக் கொண்டு! ஆமாம்—கைதியாகச் சிறைக்குள் சென்றவர், காதலனுக வெளியே வந்தார்!

சிறையில் அவர் கண்டெடுத்த கட்டழகியின் பெயர் டென்-இங்-சோ! அவள்தான் இன்று சீனுவின் ஜனநாயகப் பெண்கள் கழகத்தின் பிரதிநிதி, கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவிலே!

தோழர் காதலுள்ளங் கொண்ட அண்டனி! போர்க்கலம் பூண்ட நெபோலியன்! பல்கலை பயின்றவர்; பக்குவமாக நடக்கத் தெரிந்தவர்! இன்று உலகிலே மாபெரும் அரசியல் வாதிகளுள் ஒருவர்....ஓர் கூட்டுச் சரக்கு சூ!

அவர்தான் வந்திருக்கிருர்—வந்து நேருவோடு பேச விழைந்திருக்கிருர்! அவரும் நேருவும் பேசும் பேச்சின் முடிவிலேதான் ஜெனிவா மாநாட்டின் வெற்றியும் தோல்வியும் ஏற்படுமெனத் தோன்றுகிறது .... வெற்றியென்ருல் வானத்தில் வெண் புரு பறக்குமென கருதலாம்! தோல்வியென்ருல் வல்லூறு பாயலாமென நினைக்கலாம்!

வெற்றியெனில் அமெரிக்காவின் ஆதிக்கவெறியை ஒழித்துக் கட்ட ஆசிய நாடுகளின் கூட்டு முன்னணி தோன்றலாம்! தோல்வியெனில் அமெரிக்க ஆதிக்கத்தின் நச்சு நிழலில் சிக்குறும் நாடுகளின் மூலம் உலகத்தின் எந்தப் பாகத்திலாவது அணுகுண்டு விழலாம்!

—அண்ணு அன்பன்

தந்தி "ராஜா". போன் 268.

மாலைத் தீவுகள். இலங்கைக்குப் பக்கத்தில் உள்ளவை. சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் தீவுக் கூட்டத்தில் ஒன்றில் சில வெள்ளையர்களின் கப்பல் கரை தட்டி நின்றது. கொள்ளைக்காரன்தான் எங்கே போய் இறங்கினாலும் தங்கத்தைத் தானே தேடுவான்! இந்தத் தீவிலும் அவர்கள் இறங்கி, சுதேசிகளை அரவணைத்துக்கொண்டு, சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள் எவை என்று விசாரித்தனர். அவற்றிலே ஒரு பாழடைந்த அகழியையும் சுதேசிகள் காட்டினர்.

முப்பது தினங்கள் அந்த அகழியை ஆராய்ந்து ஒரு பாதாளக் குகையைக் கண்டுபிடித்து உள்ளே நுழைந்தனர் வெள்ளையர். சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமான தங்கம், வைரம், முத்து, மரகத நகைகளைக் கண்டுபிடித்தனர். இதில் ஒரு பெரிய வைரக் கல்லும் கிடைத்தது. இன்னும் அது லண்டன் மியூசியத்தில் இருக்கிறது.

* * *

நம்பிக்கையான இடமாக, நகை வியாபாரத்தில் பி. ஏ. ராஜு செட்டியார் கடை சேவை செய்கிறது.

வைரம், தங்கம், வெள்ளி நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் என்றும் கிடைக்கும் இடம்....

Anand...

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்.

சுவர்ணமாளிகை.. கோயமுத்தூர்.

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14.